✠

J. M. J.

# A LIFE-SKETCH
OF
# Revd. Brother Eugene Groussault, O. M. I.

925
HIL

## வண. விரத்தர் இயூஜின் குருசோ, O. M. I.
அவர்களினது
# சுருக்கமான சீவியசரிதை

இஃது

வண. S. G. இல்லறி, O. M. I. சுவாமியார் அவர்களால்
ஆங்கிலத்தில் எழுதப்பெற்று,

பரிமேலர் S. அருளானந்தம், K. S. G. அவர்களால்
தமிழிலே இசைத்து எழுதப்பட்டு,

யாழ்ப்பாணம், சஞ்சூசையப்பர் கூட்டத்து அங்கத்தவர்களால்
அச்சேற்றப்பட்டது.

A. M. D. G.

Nallur Swami Gnanapragasar L[illegible]
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

ST. JOSEPH'S CATHOLIC PRESS,
JAFFNA.

005576

*Imprimatur :*

✠ J. EMILIANUSPILLAI, O. M. I.
*Co-adjutor Bishop of Jaffna.*

Jaffna,
13-1-1950.

# முன்னுரை

சென்ற நூறு ஆண்டுகளாக அமலோற்பவ மரியநாயகியினது மகத்தான சபை (O. M. I.) நம் இலங்கா துவீபத்திலே வியப்புக்குரிய சுவிசேஷ தொண்டாற்றி வருவதை யாவரும் அறிவர். அந்தச் சபையிலே விரத்தர் (Lay-Brother) ஆகவிருந்தவரும், மண்ணினுள் மறைந்தும் மனத்தினுள் ஒருபோதும் மறையக் கூடாதவருமாகிய மகாத்துமாவாம் வண. இயூஜின் குருசோ, O.M.I. துறவியினுடைய மிகவும் சுருக்கமான சீவியசரிதையே இது. அநேகவருடங்களாக அவருடைய ஆப்தநண்பரும், பல ஆண்டுகளாகக் கொஞ்சேஞ்சித்தாயார் ஆசனக்கோவிலினது கட்டளைக் குருவுமாயிருந்துவந்த வண. S. G. இல்லறி, O. M. I. சுவாமிகள் அவர்கள் இதை ஆங்கிலத்தில் எழுதி உதவினார். அவருடைய ஆத்மவாஞ்சை நிறைந்த தேவதொண்டிற்கு, விரத்தர் குருசோ எப்பொழுதுமே பக்திவேகமும் மிக்க ஞானமும் நிறைந்த பக்கத்துணையாய் இருந்துவந்தார். அதனாலே விரத்தருடைய சரிதையை எழுதுவதற்குச் சுவாமிகள் சாலவும் சிறந்த தகுதிவாய்ந்தவராமே. ஆகவே, எங்கள் ஆழ்ந்த நன்றி சுவாமிகட்கு உரித்தாமே.

அடியேனும் மரித்துப்போன சுத்தரை அநேக ஆண்டுகளாக நெருங்கிப் பழகும் வரப்பிரசாதத்தைப் பெற்றிருந்தேன். ஆகவே சுவாமிகள் எழுதித் தந்தவைகளுடன் யான் அறிந்தவைகளையும் சேர்த்து, இசைத்துத் தமிழிலே இதை எழுதி நம் சகோதர கிறீஸ்தவர்கட்கும் பிறர்க்கும் உதவத்துணிந்தேன். இதனில் உள்ள குறைகள்யாவும் நம்மேற் சுமந்தவையாமே.

அர்ச்சியசிஷ்டர்கள், சுத்தர்கள், மகாத்துமாக்கள் முதலானவர்களைப் பற்றித் தக்கவாறு எழுதுதல் இலகுவானகாரியமன்று. சுத்தர்களை ஒருவாறு விளங்கக்கூடியவர்கள் சுத்தர்களன்றி மற்றவர் அல்லர். அஞ்சாத்துணிவினாலல்ல, அன்பினதும், நன்றியினதும் தூண்டுதலினாலேயே யான் இதை எழுத முன்வந்தேன்.

மரித்துப்போன விரத்தர் குருசோவிலே விளங்கிய வியக்கத்தக்க குணங்களை, இச்சரிதையை வாசிப்பதனால் சற்று ஊகித்துக் கொள்ளுதல்கூடும். என்றாலும் அவைகளைப்பற்றிச் சில இங்கே சொல்லுதல் தகும். தமது திருத்தொண்டை ஆற்றுவதற்காகச் செபம், தபம், தாழ்மை, பரித்தியாகம், கீழ்ப்படிதல், பிறர்நேசம் முதலியவைகளைத் தமது கேடையங்களாகக்கொண்டார். அதற்கு உதவியாக இந்தியா இலங்கையிலே அப்போஸ்தொலிக்க தொண்டாற்றுவதில் பிரபைமிகுந்த நட்சத்திரங்களாய் இலங்கிய, அர்ச்சியசிட்டர்களாகிய தொம்மை அப்போஸ்தலர், பிரான்சிஸ் சவேரியார், அருளானந்தர், சுத்தர்களாகிய தத்துவபோதகர், வீரமாமுனிவர், யோசேவாஸ் முனிவர், கொன்சால்வேஸ் முனிவர் முதலிய வேதவிளக்குகளின் சரிதைகளைச் சாக்கிரதையுடன் படித்தார். எங்கள் தமிய நாட்டிலே அரிய தொண்டாற்றிப் பின் பரகதி சென்ற பரிசுத்த மேற்றிராணிமார் ஆத்ம இரட்சணியத்தின் பேரிலே அன

லான ஆவல் கொண்டிருந்த பழைய "மிஷனறிக்" குருமார் முதலியோரினது பரித்தியாகமே தேங்கிய சீவிய முறைகளைப் படித்துச் சிந்தித்தார். எங்கள் தமிழ்மொழியைக் கற்றுக்கொண்டார். எங்கள் பழக்க வழக்கங்களை விளங்கிக்கொண்டார். எங்களை வழிநடத்துவதற்காகப் பலவிதத்திலும் தாம் "மாற்றிப் பிறக்க" வேண்டுமெனத் துணிந்துகொண்டார். தமிழருட் தமிழனானார்.

"மாற்றிப்பிறக்க" அவர் செய்தவை யாது? ஒரே சொல்லில் அதைச் சொல்லுகில் துறவியானதால் முற்றையும் துறந்தார். அதாவது உலக கவலைகளில் இருந்து தன்னைப்பிரித்து விச்சேதம் பண்ணினார். "நான்" என்பதை வெறுத்தார். சுகமென்பதை மறுத்தார். பரித்தியாக சத்தியம்பூண்டார். செபமே அவருடைய திடங்கொண்ட ஆயுதம். தவமே அவருடைய விரதம். சிரேஷ்டர் இட்டதே அவருக்குத் தேவகட்டளை. தாழ்மையே அவரினது அணிகலம். வறுமையே அவர்க்கு உற்ற சகோதரம். தியான சிந்தனையே அவருடைய ஆவி. சந்நியாசமே அவர் சலிக்காது சென்ற மோட்சபாதை. பிறர்நேசமே படைத்தவர் அவரினது இதயத்துள்வைத்த காந்தம். அகத்துறு ஆழ்ந்த உள்ளொடுக்கமான சீவியத்தினால் தமது இரட்சகருடன் என்றுமே ஒன்றித்திருந்தார். செல்வர் வறிஞர் என்ற பேதம்பாராட்டாது, எல்லாருக்கும் தம்மால் ஆனமட்டும் எல்லாமாகப் பிரயாசப்பட்டார். வறிஞர்கள் வாடினவர்களுடைய சுகதுக்கங்களைத் தம்முடையவைகள் ஆக்கிக்கொண்டார். கரைகாணாத கருணாநிதியுடையவரது திரு இருதயத்துடன் ஒன்றித்து, விரத்தருடைய இருதயம் தமது சகோதரர்களினுடைய இருதயங்களுடன் சேர்ந்து துடித்தது.

மேலே சொல்லப்பட்ட சுகுணங்கள்யாவும் குருசோ விரத்தரிலே விளங்கியதை அவருடைய சிரேஷ்டர்களும், ஞானச்சகோதரர்களும், யாழ்ப்பாணவாசிகளும் நன்கறிவர். அறுபது ஆண்டுகளாக அவர் சாங்கோபாங்கத்தினது பாதையிலே விமரிசையுடன் ஒழுகி இருந்தபடியால் மரிக்கும்போது "என் ஆண்டவரே! என்னால் இயன்றமட்டும் தேவரீர் எனக்கு இட்டபணிவிடையைச் செய்து முடித்தேன்"—Consumatum est—என்று சொல்லத் தகுதியுடையவராய் இருந்தார்.

எங்கள் உயிர்போல் எங்கட்கு அருமையாய் இருந்து, அதவும் சுத்தர்களாய் இருந்து, இப்போது மரணத்திரையினுள் மறைந்திருப்பவர்களை நாங்கள் இழந்துவிட்டோமா? இல்லை! இல்லை!! இன்னும் முன்னிலும் அதிகமாக அவர்கள் எங்கட்குக்கிட்ட இருக்கிறார்களென்பதை விசுவாசக் கண்கள் எங்கட்குக் காட்டும். எங்கட்காக வேண்டுதல்புரிய, யாழ்ப்பாண மக்களாகிய எங்களைத் தங்கள் உயிர்போல் நேசித்திருந்த எத்தனையோ பரிசுத்த மேற்றிராணிமார், குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் பரலோகத்திலே இருக்கிறார்கள். அந்த மகிமைப்பிரதாபம்நிறைந்த மகாத்துமாக்களின் கூட்டத்தினுள் அன்பான விரத்தர் குருசோவும் சிறுபிள்ளையைப்போல் தாழ்மைநிறைந்த தொண்டை எங்கட்காக ஆற்றிவந்த விரத்தர் பிறிஷென்ற், O. M. I. அவர்களும்



இலங்கிநின்று அடியார்களாகிய எங்கட்காக வேண்டிநிற்கின்றார்கள் என்று சிந்திப்பது எங்கட்குப் பெரிதும் ஆறுதலை அளிப்பதேயாம்.

"காலம் போகும், காலம் காட்டும்." இனிவருங்காலங்களிலே எங்கள் மாதாவாகிய திருச்சபை விரத்தர் குருசோவைப்பற்றி யாதும் அதிகாரவரிசையாய்க் கூறுமோ யான் அறியேன். அது பராபரனினது பரம இரகசியம். ஆகவே அவர் மூலமாக எத்தனையோ நன்மைகளைப் பெற்ற நாங்கள் அவருக்காக வேண்டுதல் செய்வோமாக. அவருடைய இந்தச் சுருக்கமான சீவிய சரிதையை வாசித்துப் பயன் அடைவோமாக.

அன்பினுருவில் அன்பாக அன்புவைத்து—எம்
துன்பம் துடைத்த, துறவோர் இறையவனே!
உம்மன்பை மறவோம், அருளில் என்றும் வாழ்ந்திடுவோம்—நம்
மன்பதை அன்பாயேற்று, அடியவர்க்காய் வேண்டிநில்லும்.

**S. Arulanantham**

Main Street, Jaffna.
23rd November, 1949.

---



பரமபதமடைந்த எம் அரியதந்தை

## வண. விறதர் E. குருசோ, O. M. I.

(பத்திக்கூட்டங்களின் ஸ்தாபகரும் பரிபாலகரும்)

மரணபரியந்தம் எம்மை நேசித்தார்; சீவியத்தில் நாம் அவரை நேசித்தோம்;
மரணத்தின்பின் மறவாதிருப்போமாக.

| | | | |
|---|---|---|---|
| தோற்றம் | 22-2-1871 | சந்நியாசவார்த்தைப்பாடு | 8-12-1894 |
| யாழ்ப்பாண வருகை | 4-11-1888 | மறைவு | 13-2-1948 |

### வண. விரத்தர் இயூஜின் குருசோ, O. M. I.

அவர்களினது

# சுருக்கமான சீவியசரிதை

## 1871—1948

அமலோற்பவ மரியநாயகியினது தியாகிகளுள் ஒருவராயிருந்து விளங்கிய வண. இயூஜின் குருசோ விரத்தர் 1871-ம் ஆண்டு மாசி மாதம் 22-ம் தேதி திருச்சபையினது மூத்தகுமாரத்தியென நாமம் புனையப்பெற்ற பிராஞ்சிய தேயத்திலே, பிறித்தனி என்ற மாகாணத்துள் இருக்கும் லா றெஷேல் என்னும் பட்டினத்திலே பிறந்தார். அவரினது பெற்றோர் மிகவும் பத்தி வைராக்கியம் நிறைந்த தேவ தொண்டர்களாயிருந்தவர்கள். விவசாயமே அவர்களினது தொழிலாயிருந்தது. பொயித்தியே எனும் நகரில் இருந்த அப்போஸ்தொலிக்க பாடசாலையிலே இளைஞனை இயூஜின் கல்விகற்றுவந்தார்.

கலாசாலையிலே கல்விபயின்றுமுடிந்ததும், மேலான தேவ அழைத்தல் அவரினது மனத்தை அருட்டி வலிந்து இழுத்தது. தமது முழுச் சீவியத்தையும், தாம் சந்நியாசம் பூண்டு தேவதொண்டுக்கே அர்ப்பணஞ் செய்யவேண்டுமென ஏவப்பட்டார். மாசில்லாத தேவதாயாரிலே உருக்கமான அன்பு பூண்டிருந்தவர், ஆதலால், ஒ. எம். ஐ. எனச் சுருக்கமாக அழைக்கப்படும் அமலோற்பவ மரியநாயகியினது தியாகிகள் கூட்டத்திலே தாமும் சேர்ந்து தொண்டாற்றவேண்டுமென்று ஆவல் கொண்டார். பிராஞ்சிலே லூவாசியே என்ற பட்டினத்திலே அந்தத் தியாகிகளினுடைய மடம் ஒன்றுண்டு. அம்மடத்தினது சிரேஷ்ட குருப்பிரசாதியை வாலிபனை குருசோ கண்டு பணிந்து, தமது மனத்தினது ஆசையை வெளிப்படுத்தியவுடன், அக்குரவர் அவரை வெகு சந்தோஷத்துடன் மடத்திலே ஏற்றுக்கொண்டார். பதினேழாம் பிராயத்திலே, அதாவது 1887-ம் ஆண்டிலே அந்த மடத்திலே தமது நவசன்னியாசத்தைச் செய்துமுடித்தார்.

நவ சன்னியாசத்தை முடித்துத் தமது முதல் வாக்குத்தத்தத்தையும் கொடுத்தார். கொடுத்ததன்பின் இனிமேல் தாம் புரியவேண்டிய தொண்டைப்பற்றி முழுச்சபையினதும் பிரதமசிரேஷ்டர் தமக்கு இடப்போகும் கட்டளையை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றார். அதுவும் தாமதமின்றி அவருக்கு இடப்பட்டது.

அந்த நாட்களிலே யாழ்ப்பாணத்துக்கு விக்கார் அப்போஸ்தொலிக்குவாயிருந்தவரான வந். டக்றர் அன்டிறா மெலிசன், O. M. I. ஆண்டவர் அவர்கள், யாழ்ப்பாணத்திலே இருந்து பிராஞ்சு சென்றிருந்தார். அவர் பிரான்சிலே பல பாகங்களிலும் சென்று, தம்முடன் இந்த நமது

நாட்டிலே அப்போஸ்தொலிக்க தொண்டு ஆற்றுவதற்காக அமலோற்பவ சபையைச் சார்ந்த "மிஷனறி" மார் பலரைச் சேர்த்து இங்கு அழைத்துவரப் பிரயாசைப்பட்டுக்கொண்டிருந்தார். இயூஜின் குருசோ விரத்தரைக் கண்டபொழுது, அவரையும் தம்முடன் யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிவந்தார். காலகதியில் அவருக்குக் குருப்பட்டமுங் கொடுத்துத் தமது மந்தைகளை மேய்ப்போருள் ஒருவராய் அவரையும் தம்முடன் வைத்துக்கொள்ளத் தீர்மானித்தார். ஆகவே, பல நாட்கள் செல்லுமுன், யாழ்ப்பாணத்திலே தற்போது வயதில் முதிர்ந்த கத்தோலிக்கர் யாவராலும் நன்கு அறியவும், மேலாகப் பூசிக்கவும்பட்ட குருமுனிவர்களான காலஞ்சென்ற A. டோறு, O. M.I., J.B பூலாங், O.M.I. சுவாமிகளுடன் விரத்தர் 1888-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23-ந் தேதி நமது புண்ணிய பூமியில் வந்து இறங்கினார்.

மேலே வரையப்பட்டபடி, காலகதியிலே குருத்துவ பதவிக்கு உயர்த்தப்படும்படியே இங்கு அழைத்துவரப்பட்டார். ஆனால் அவருடைய சிரேஷ்டர்கள் அவர் ஒரு விரத்தராகவே சீவியகாலம் முழுதும் தொண்டாற்ற வேணுமென்று சிலகாலஞ் சென்றபின் தீர்மானித்துவிட்டார்கள். அவருடைய மனதுக்கும் அதுவே நிரம்பவும் விருப்பமான காரியமாயிருந்தது. விரத்தராகவே இருந்து, அப்போஸ்தொலிக்க தொண்டாற்றுவதை அவர் ஆவலாகக் கையேற்று, அதற்குத் தம்மை முற்றிலும் பக்குவமும், தகுதியும் உள்ளவராக்கும்படிக்குச் செய்யவேண்டிய யாவையும் தாமதமின்றிச் செய்ய ஆரம்பித்தார்.

விரத்தரென்ற அளவிலே முதன் முதல் அவர் பெற்ற நியமனம், மேற்றிராணியாண்டவருடைய சென் சாள்ஸ் என அழைக்கப்படும் இல்லத்திலே உள்ள பெலவீனப்பட்ட, நோயுற்ற, வயது சென்ற குருப்பிரசாதிகளை ஆதரித்துப் பேணுவதே. அவர் சந்நியாசம் பூண்ட நாட்தொடக்கம் இப்பேர்ப்பட்ட பிறர்சிநேகமுயற்சிகளைப் புரிவதில் மரிக்குமட்டும் பெரிதும் ஊக்கமுடையவராயிருந்தார். வேறு எவ்வளவு காத்திரமான அலுவல்களின் மத்தியிலும், நோயாளருக்கு ஆறுதலை அளிப்பதற்கு ஆத்திரத்துடன் முயற்சிசெய்வார்.

எல்லாருக்கும் எல்லாமாகவேண்டும். தம்மால் எவ்வளவு நன்மை தமது சீவியகாலத்திலே புரிய இயலுமோ அவ்வளவையும் தாம் புரிந்தே தீரவேண்டுமென்ற துணிபு அவருடைய இருதயத்தில் ஊன்றிப் பதிந்திருந்தது. அப்படிச் செய்வதற்குத் தாம் தமிழையும் ஆங்கிலத்தையும் நன்றாய்க் கற்றுக்கொள்ளுதல் அவசியமென உணர்ந்தார். ஆகவே தக்கமுயற்சிசெய்து, இந்த இரு பாஷைகளையும் சில வருடங்களில் கற்றுக்கொண்டார். அதன்பயனாகக் காலகதியில், தமிழும் ஆங்கிலமும் பேசப்படும் நாடுகளில் உள்ளவர்கட்கு அந்த இரு பாஷைகளிலும் தமது சீவியகாலத்திலே பல்லாயிரம் சிறந்த கடிதங்கள் எழுதக்கூடியவரானார். அப்போஸ்தொலிக்க தொண்டைப்புரியவும், மனிதர்



களின் ஆத்ம ஈடேற்றத்துக்குத் தாம் செய்யவேண்டிய யாவையும் செய்யவும், அவருடைய ஆத்துமத்திலே மூண்டெரிந்த அனலான ஆவலினால் ஏவப்பட்டவராய்த் தம்மைப் பலவிதத்திலும் அதற்குப் பக்குவசாலியாக்கிக்கொண்டார்.

அடுத்தபடியாக விரத்தர் சஞ்சூசையப்பர் கத்தோலிக்க அச்சியந்திரசாலைக்கு உபதலைவராகவும், முகாமைத்தொழிலாளனாகவும் நியமிக்கப்பட்டார். உண்மையாகவே மேற்றிராசனத்திலே உள்ள அந்த மகத்தான ஸ்தாபனத்துக்கு அன்று தொடக்கம் அவர் எவ்விதமான தொண்டையும் புரியவேண்டியவரானார். அச்சியந்திரசாலையிலே அவர் அநேக வருடங்களாக வேலைபுரிந்தார். அந்த நாட்களிலேதான் அவர் யாழ்ப்பாணப்பட்டினத்திலே வசித்த மக்களது உண்மையான நிலைமையை நன்கு அறியத் தருணமகப்பட்டது. யாழ்ப்பாணப்பட்டினத்தவர்கள் வறியவர்களோ, செல்வர்களோ அவர்களினது சனசமூகக் கட்டுப்பாடுகள், பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள் எப்பேர்ப்பட்டன? கத்தோலிக்க மக்களின் வேத அனுசாரம், தேவபக்தி, பொருள் ஆதாரம் இவைகளின் நிலைபரமென்ன? அதுவும் விசேஷமாகத் தொழிலாளர்களினதும், வறியவர்களினதும் நிலைமையாது? என்ற இப்பேர்ப்பட்ட வினாக்களுக்குத் தக்க உத்தாரம் சொல்ல அந்த அச்சியந்திரசாலையிலேயே முதன்முதற் கற்றுக்கொண்டார். தொழிலாளருடன் நெருங்கிப்பழகி, வெகு அமைதியாகவும், மவுனமாகவும் சகலத்தையும் அவதானித்து, மேலே கூறிய விஷயங்களைப்பற்றி நன்கு அறிந்துகொண்டார்.

பட்டினத்திலே எத்தனையோ மிகவும் வறியசனங்கள் இருந்தார்கள். அந்த நாட்களில் இங்கே சுருட்டு முதலாளிமார்களினுடைய தொழில்மடுவங்கள் பல இருந்தன. அந்தக் கொட்டில்களிலே அநேகமாயிரம் முதியவர்களும், வாலிபர்களும், சிறுவர்களும் வேலைக்கமர்ந்து இருந்தனர். விசேடமாக வாலிபர்களினது தொகையே அதிகம். அந்த நாட்களிலே அந்த வாலிபர்களினது குணம், நடை, போக்கு எல்லாம் மிகவும் ஈன, எளிய, தறுகுறும்புப் போக்காயிருந்தது. அவர்களினது வேத அறிவு குறைவாயிருந்தது. வேத அனுசாரமோ அவர்களுக்கு வேம்பாயிருந்தது. அதை உற்று உணர்ந்த துறவியினது மனத்திலே அவர்களினுடைய பரிதாபமான நிலைமையையிட்டு வெகு கவலையுண்டாயிற்று. எமது இரட்சாபெருமான் ஒரு தருணத்திலே சனக்கூட்டத்தைப்பார்த்து இரங்கிச் சொன்னமொழிகள் அவருடைய மனத்தை எந்தநேரமும் தட்டி அருட்டிக்கொண்டிருந்தன. "நாம் இந்தச் சனக்கூட்டத்தின்மேல் இரங்கி அனுதாபங் கொள்ளுகின்றோம்." ஐயையோ! எப்பேர்ப்பட்ட பரிதாபம்! சனசமூகத்துக்கு இந்தவாலிபர்களினுடைய நிலைமை எத்தகைய தீங்கைவிளைக்கும்! அத

ணிலும் கேடு இவர்களுடைய அழியாத ஆத்துமங்கள் நித்திய கேட்டின் பாதையிலே யல்லவோ அலைகின்றன என உணர்ந்தார்.

இவ்விதமாக ஊன்றிச் சிந்தித்த விரத்தருடைய மனத்திலே அப்பேர்ப்பட்ட கேடுநிறைந்த நிலைபரத்தை முற்றாகச் சீர்ப்படுத்தவேண்டுமென்ற ஆவலும் துணிகரமும் உதித்தன. அதைச் செய்துமுடிக்கத் தாம் எவ்விதமுயற்சிகளைப் புரியவேண்டுமென ஆலோசித்தார். முதன் முதல் அதற்காகப் பாபரனை நோக்கி எந்நேரமும் உருக்கமாகப் பிரார்த்திக்கத் தொடங்கினார்.

யாழ்ப்பாணப்பட்டினத்திலே பல்லாயிரம் வாலர்கள் சுருட்டுத் தொழிலிலே அந்த நாட்களில் அமர்ந்து இருந்தார்கள் என்று முன் சொன்னோமே அவர்களுள் மிகப்பெருந்தொகையினர் இந்துக்களாய் இருந்தார்கள். குறைந்த தொகையினரே கத்தோலிக்க வாலிபர்கள். ஒரு சுருட்டுக்கொட்டிலிலே 100 இந்து வாலிபர்கள் இருந்தால், அங்கே ஒரு பத்து, இருபது கத்தோலிக்க வாலிபர்கள் இருப்பார்கள். ஒரு குடம் தண்ணீருள் சிலதுளிகட்குச் சமானமன்றோ! லட்சம், பத்திலட்சக்கணக்காக அந்த நாட்களில் சுருட்டுகள் சுருட்டப்பட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையிலுள்ள மற்றெல்லாப் பகுதிகளுக்கு மாத்திரமல்ல, ஆனால் மலாயா முதலிய பிரதேசங்களுக்கும் யாழ்ப்பாணச் சுருட்டு விற்பனைக்காக ஏற்றுமதி செய்யப்பட்டது. அந்த நாட்களில் யாழ்ப்பாணச் சுருட்டுக்கு இருந்த மானமோ மெத்த. தொழிலும் சுருட்டு முதலாளிமார்களுக்குப் பாரிய லாபத்தை ஈட்டிய பொற்சுரங்கமாக இருந்தது.

கிடுகுகளினால் வேயப்பட்ட நீண்ட பதிந்த மடுவங்களுள் தொழிலாளர்கள் நிரைநிரையாகச் சப்பாணிகொட்டியிருந்து சுருட்டுகளைச் சுருட்டுவார்கள். சிலபெரிய முதலாளிமார்களின் தொழிற்சாலையிலே 300 அல்லது 400 வாலிபர்களும் இருந்து தொழில் செய்வார்கள். அவர்களினது விரல்கள் தீவிரமாகச் சுருட்டுகளை உருட்டிக்கொண்டிருக்கும். அவர்களின் நாக்குகளோ அவைகளிலும்பார்க்கப் பரபரப்பாகப் பசப்பிக்கொண்டே இருக்கும். ஐயோ! பெரும் பகுதியாக அவர்களினது சம்பாஷணை அவ்வளவு சுத்தமானதாய் இருக்கவில்லை. எளிய பேச்சு, கிலிகோலமான கதைகள், கிலிசம்பறையான பகிடிகள் கேலிகள், அவலட்சணமான சொற்கள், துன்மார்க்கத்தைத் தூண்டிவிடும் குறிப்பான சுட்டுக்கதைகள், நொட்டைகள், சன்மார்க்கத்துக்கும், வேதநெறிமுறைக்கும் ஒவ்வாத சேட்டைகள் பாஷைகள்—அவைகள் யாவும் மலிந்து பொலிந்த சாலைகளாகவே சுருட்டுத் தொழிற்சாலைகள் அந்த நாட்களில் இருந்தன! சில தொழிற்சாலைகளில் இவ்விதமான கிலிகோலங்களைக் குறைப்பதற்காகச் சில முதலாளிமார்கள் அலங்காரமாக வாசிக்கக்கூடிய ஒரு தொழிலாளனைத் தெரிந்து, வேலைநேரத்திலே



ஒரு புத்தகத்தை யாவரும் கேட்கத்தக்கதாக வாசிக்கும்படி செய்வார்கள். தமிழ்ப்புராண காவியங்களே பெரும்படியாக வாசிக்கப்பட்டன.

இவைகள் யாவும் அங்கே தொழில் செய்த கத்தோலிக்க வாலர்களுக்கு இடறலானவைகளாய் இருந்தன. வறுமையின் நிமித்தம், அப்பேர்ப்பட்ட சாலைகளிலே அவர்கள் வேலைசெய்ய நேர்ந்தது. ஆனால் வேலைத்தலமோ அவர்களுடைய வேதவிசுவாசத்துக்கும் ஆத்ம இரட்சணியத்துக்கும் பங்கம்வருவிக்கும் இடமாயிருந்தது.

இந்தச் சங்கடமும் பரிதாபமும் நிறைந்த நிலைபரத்திலிருந்து அந்த வாலர்களை மீட்கவேண்டுமென விரத்தர் துணிந்துகொண்டார். 1840-ம் வருடம் தொடக்கம் 1888-ம் ஆண்டுவரையும் ஐரோப்பாவிலே தமது மேலான அர்ச்சியசிட்ட சீவியத்தினாலும், செய்தபுதுமைகளினாலும், புரிந்த அரிய அப்போஸ்தொலிக்க தொண்டினாலும் வெகுவாகப் பூசிக்கப்பட்டுவந்தவரான அர்ச். டொன் பொஸ்கோவைப் பற்றித் தற்போது கத்தோலிக்க உலகம் நன்கு அறியும். அவர் இத்தாலியிலே ரியூறின் நகரிலும் இன்னும் வேறு பட்டணங்களிலும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போலும், இன்னும் மோசமாக ஓநாயினது குட்டிகளைப்போலும், ஆயிரமாயிரம் வாலர்கள் அலைந்து உலைந்து கெட்டு அழிவதைக் கவனித்தார். பின்பு அவர் ஏறக்குறைய 50 வருடங்களாகப் புரிந்த அயராத தொண்டின்பயனாக அந்த ஓநாயினது குட்டிகளை எல்லாம் ஆண்டவரின் செம்மறிப்புருவைகளாக மாற்றிவிட்டார் என்று அவருடைய சீவிய சரிதையில் வாசிக்கிறோம்.

அவ்விதமே பரமபதம் அடைந்த குருசோ விறதர் அவர்களும் யாழ்ப்பாண நகரிக்கு எங்கள் நல்ல ஆயனினால் அனுப்பப்பட்ட இன்னொரு சிறிய டொன் பொஸ்கோவெனக் கூறில் அது மிகையாகாது.

நிற்க, கேட்டினது வழிகளிலே இருந்து. வறியவர்களும், சுருட்டுத் தொழிலாளிகளுமாயிருந்த வாலிபர்களை நன்னெறிக்குத் திருப்பிவிட எங்களினது டொன்பொஸ்கோ துணிந்துகொண்டாரென மேலே குறித்தேன். என்ன செய்தார்? தமது முறைகளை நன்றாய் ஆலோசித்து முடிவு செய்தபின், விரத்தர் சுருட்டுத்தொழிற்சாலைகளை அடிக்கடி சந்திக்கத் தொடங்கினார். ஒவ்வொருசாலையிலும் தொழில் செய்துவந்த கத்தோலிக்க வாலர்களைக்கண்டு, அவர்களுடன் அன்பாகச் சுருக்கமாகச் சம்பாஷித்து, பையமெல்ல ஒவ்வொருவனுடைய நிலைபரத்தையும் பற்றிய யாவையும் நன்றாய் ஊகித்துக்கொண்டார். பூசை, பிரார்த்தனை, தேவதிரவிய அனுமானங்களைப்பற்றி அவர்களுள் அநேகர் கிஞ்சித்தேனும் சிந்திப்பதில்லையெனக் கண்டறிந்தார். முதலிலே சில வாலர்களைத் தம்முடைய அன்பினால் கவர்ந்து இழுத்து, ஒரு சிறு கூட்டமாக்கி அவர்களைப் பாவசங்கீர்த்தனம் பண்ணும்படியும், சற்பிரசாதம் பெறும்படியும் செய்வித்தார், அதன்பின் அவர்கள் பழையபடி கேட்டின்வழிசெல்லாது அவர்களைக் கண்ணும் கருத்துமாய் விசாரித்துவந்

தார். அதற்கு வேண்டியவைகளை வெகு ஞானத்துடனும் விமரிசையுடனும் தேடிவந்தார்.

தொழிற்சாலைகளிலே வேலைமுடிந்தபின் வாலர்கள் தெருநீளந்திரிந்து வம்பளப்பது பொதுவாக அவர்களினதுபோக்கு. தாம்தேடி அலைந்த வாலர்கள் அவ்விதம் கெட்டுப்போகாதபடி, சஞ்சூசையப்பர் அச்சுக்கூடத்துக்கு அருகாமையிலுள்ள சிறிய மைதானத்திலே அவர்கள் வந்து உதைபந்தாட்டம் முதலிய சில விளையாட்டுகளில் ஒரு மணி நேரத்தைப் போக்கும்படி செய்வார். விளையாட்டு முடிந்ததும் செபமாலை ஓதிவிட்டு வாலர்கள் வீடு செல்வார்கள். .சங்கீதத்திலே விருப்பமுடையவர்களுக்கு ஒரு மிருதங்கமும் கைத்தாளமும் வாங்கிக்கொடுத்தார். ஓடி யாடி விளையாடாமல் இருந்தவர்கள் பொழுது போக்குக்காகப் பல உள்வீட்டு விளையாட்டுக்கு வேண்டிய உபகரணங்களை வாங்கிக் கொடுத்தார்.

முதலிலே விறதரிடம் வரவும், அவருடன் சம்பாஷிக்கவும், அவர் வெகு சுருக்கமாகச் சொன்ன புத்திமதிகளைக் கேட்கவும் வந்த வாலிபர்கள் இரண்டு மூன்று பேர்களே. பின்பு நாட்கள் செல்லச்செல்ல ஒருவராய் இருவராய்ப் பல தொழிற்சாலைகளிலிருந்து வாலர்கள் வந்து சேர்ந்தார்கள். ஒரு துளிதேனுடன் நூறு எறும்புகளைப் பிடிக்கலாமல்லவா? ஒரு காந்தம் எத்தனையோ இரும்புத் துண்டுச் சல்லிகளை இழுக்குமல்லவா? அவ்விதமே குருசோ விறதருடைய அன்பெனும் தேனினுல்—காந்தத்தினுல்—அநேகவாலர்கள் இழுபட்டு வந்ததினுல், கூட்டமும் மெல்லமெல்லப் பெருக்கத் தொடங்கியது. ஒருவருடத்துள் ஒரு முப்பது நாற்பதுபேர் வந்து கூடிவிட்டார்கள்.

## அர்ச். சூசையப்பர் கூட்டம்

யாழ்ப்பாணப்பட்டினத்திலே தற்போது அநேக பத்திச்சபைக் கூட்டங்கள் உண்டு. அவைகளுள் அதிகம் முன்னேற்றமடைந்த கூட்டங்களுள் சஞ்சூசையப்பர் கூட்டம் மிகவும் முக்கியமானது. அக்கூட்டத்தினது சிறிய துவக்கம் இதுவேயாம். பிராஞ்சுதேசத்திலே திமொன் தாவித் தெண்பவர் சஞ்சூசையப்பர் பாதுகாவலின்கீழ் அந்த நாட்களிலே அநேக பத்திக்கூட்டங்களை அங்கே ஸ்தாபித்து இருந்தார். குருசோ விரத்தரும் அவைகளையே முன்மாதிரியாகக் கொண்டு 1899-ம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆசனக்கோவிலுக்குச் சேர்ந்த சஞ்சூசையப்பர் கூட்டத்தையும் மேல்அதிகாரிகளுடைய அங்கீகாரத்துடன் முறைமைப்படி ஸ்தாபித்தார். சுருட்டுத்தொழிலில் அமர்ந்திருந்த கத்தோலிக்க வாலர்களை அக்கூட்டத்திலே அங்கத்தவர்களாகும்படி ஏவினுர். வந்து சேர்ந்தவர்கள் பின்னேரத்திலே உதைபந்தாட்டம் முதலிய விளையாட்டுகளில் கலந்துகொள்வார்கள். வாரத்திலே இரண்டொருமுறை வேத அனுசாரம், ஞானச்சீவியம் முதலியவை

005576



அர்ச். சூசையப்பர் கூட்டம் (1899 இல் ஆரம்பிக்கப்பட்டது)

களைப்பற்றி விரத்தர் புத்திமதி கூறுவார். ஞாயிறுவாரத்திலே எல்லோரும் கூட்டமாகக் கூடித் திவ்விய பூசைகண்டு நற்கருணை உட்கொள்ளுவார்கள். தொடக்கத்திலே கூட்டத்தினது முயற்சிகள் அவ்வளவும்தான்.

கொஞ்சக்காலத்துள் சுருட்டுத்தொழிலாளரான வாலிபரிலே அதிசயத்துக்குரிய மாற்றம் ஏற்பட்டது. அந்நாட்களிலே பட்டினத்திலே யாரையும் கடிந்துகூறும் வசைமொழிகளுள் "என்ன! நீ ஒரு சுருட்டுக்காரக் காவாலிபோல் இருக்கிறாய்" என்று வைதலும் ஒன்று. அந்த ஈன நிலைபரம் தீவிரமாக மாறியது. ஓநாயினது குட்டிகள் சுத்த செம்மறிப்புருவைகளாய் மாறியதுபோல், சஞ்சூசையப்பர் கூட்ட வாலிபர்கள் "காவாலிகள்", "நட்டாமுட்டிகள்" என்ற வசைகளை முற்றுமே ஒளித்துப் பட்டினத்திலே யாவராலும் மதிக்கப்பெற்ற நற்குண சீலராக ஒழுகினார்கள். உண்மையிலே "மாற்றிப்பிறந்து" விட்டார்கள். அதுவே வியக்கத்தக்க "மறுபிறப்பு" ஆயிற்று.

தொழிற்சாலைகளுள்ளும் பெரிய ஒருமாற்றம் ஏற்பட்டது. கிலிகோலமான பேச்சுக்களும், கேலிகளும், அசுசியான வார்த்தைகளும் ஆவைகளை விட்டகன்றன. பரிசுத்த கற்புக்கெதிரான பேச்சுப் பறந்துவிட்டது. தங்களுடைய பிரயாசத்தினால் வாலர்கள் பல சுருட்டு மடுவங்களிலே யேசு இரட்சகருடைய படங்களை ஸ்தாபித்தார்கள். மத்தியானம் திருந்தாதி மணி கேட்டவுடன் இந்து வாலர்கள் எல்லோரும் பார்த்திருக்க கத்தோலிக்கவாலர்கள் சிலநிமிஷங்கட்கு வேலையைநிறுத்தி எல்லோருமொருமித்துத் திருந்தாதி ஓதுவார்கள். புராணங்களையும், துன்மார்க்கத்துக்கேதுவான சரிதைகளையும் வாசிப்பதை நிறுத்திவிட்டுச் சன்மார்க்கத்துக்கேதுவாய கத்தோலிக்க நூல்களை மடுவங்களிலே வாசிக்கும்படி செய்தார்கள். அவர்களுடைய தூய பேச்சினால் வேதநெறியில் தளர்ந்திருந்த எத்தனையோ வாலர்கள் தேவவழிபாட்டில் புதிய ஊக்கமுடையோரானார்கள். அவர்களுடைய முன்மாதிரிகையினால் சில இந்து வாலிபர்கள் ஞானவெளிச்சமடைந்து மெய்மறையைத் தழுவிச் சஞ்சூசையப்பர் கூட்டத்து அங்கத்தவர்களுமானார்கள். இவைகளிலிருந்து தேவபக்தியை வளர்க்கவும், உத்தமராய் ஒழுகவும், தங்கள் ஆன்மாக்களை ஈடேற்றவும் சஞ்சூசையப்பர் கூட்டம் எவ்வளவு சிறந்த மேலான எத்தனமாக இலங்கத் தொடங்கியதென்பதை இலகுவில் யூகித்துக் கொள்ளலாம்.


இவைமாத்திரமா? இந்தச் சிறந்த கூட்டத்திலே சேர்ந்திருந்த சில ஏழை வாலிபர்கள் உன்னதமான குருப்பதவிக்கு உயர்த்தப்படும் அழைத்தலைப்பெற்றுத் தற்போது யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே உத்தமமான தேவதொண்டாற்றி வருகின்றார்கள். சில வாலர்கள் விரத்தராயும் ஒழுகுகின்றார்கள். தற்போது தோலகட்டியிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிரஸ்தாபமுள்ள செபமாலைத் துறவிகளினது சபையை

அதிவண. B. A. தோமஸ், O. M. I, சுவாமி அடிகள் அடியிட்ட பொழுது நமோவென அதில் சேருவதற்கு முன்வந்த வாலிபருட்சிலர் சஞ்சூசையப்பர் கூட்டத்து அங்கத்தவர்களாயும், சிலர் அர்ச். அந்தோனியார் கூட்ட அங்கத்தவர்களாயும் இருந்தார்கள். குருசோ விறதர் அவர்களை ஊக்கப்படுத்தி ஏவி இருந்தார்.

சஞ்சூசையப்பர் கூட்ட அங்கத்தவர்களினது தொகை விரைவாக அதிகரித்துக்கொண்டுவந்தது. ஆகவே அவர்கள் கூட்டங்களைக் கூடுவதற்கு ஒரு சாலையும், விளையாடுவதற்கு ஒரு விசாலமான மைதானமும் அவசியமாயிருந்தன. அந்த நாட்களிலே யாழ்ப்பாண மேற்றிராசனத்தை ஆண்டுபரிபாலித்துவந்த வந்திக்கத்தக்க என்றியூலன் ஆண்டவரவர்கள் கத்தோலிக்க வாலரையும் பாலரையும் உத்தம கத்தோலிக்கராகப் பயிற்ற வேண்டுமென்ற பெரும் ஆவல்நிறைந்தவராய் இருந்தார். குருசோ விறதர் செய்துவந்த முயற்சிகள் அவருடைய பிதாவுக்குரிய இதயத்தைக் கொள்ளைகொண்டன. தமக்கு எப்போதும் இயல்பாகவுள்ள தாராள குணத்துடனே சஞ்சூசையப்பர் கூட்டத்துக்கு உதவிசெய்ய முன்வந்தார். அச்சியந்திரசாலைக்கு அருகாமையிலே உள்ள நிலம் அவ்வளவையும் கூட்டத்தின் பாவனைக்குக் கொடுத்து உதவிசெய்தார். மேற்றிராணியாருடைய அன்பான தருமகொடையைக் கொண்டும் பிராஞ்சு தேசத்திலுள்ள உபகாரிகளினது தயவாலும் பட்டினத்திலும் இன்னும் பிறவூர்களிலுமுள்ள பிறர்சிநேகம்நிறைந்த கத்தோலிக்கர் உதவிய தருமநிதியைக்கொண்டும் விரத்தரும் கூட்டத்தவர்களும் தங்களுக்கென ஒரு சிறிய கோவிலையும், ஒரு சாலையையும் 1901-ம் ஆண்டு கட்டிமுடித்தார்கள்.

1909-ம் ஆண்டு வண. றே சுவாமியாருடைய சிபாரிசினல் சஞ்சூசையப்பர் கூட்டம் பிராஞ்சு தேசத்திலே (The Infant Jesus' l'oeuvre Timon David) திமொன் தாவீத் என்பவரினல் ஸ்தாபிக்கப்பட்டிருந்த திவ்விய பாலக யேசுவினது சபையெனும் பிரதம கூட்டத்துடனே திருச்சபையின் பிரமாணங்கட்கிணங்க இணைக்கப்பட்டுச் சுவிகார உருத்தைப் பெற்றது. தற்போது இந்தக்கூட்டத்திலே 350 ஆண்கள் அங்கத்தவர்களாய் இருக்கிறார்கள். இவர்களுள் 150 பேர் விவாகமான முதிய அங்கத்தவர். மற்றைய 200 பேரும் வாலரான இளைய அங்கத்தவர். யாவரும் உத்தமமான கிறீஸ்த சீவியத்திலே ஒழுகி எல்லோருக்கும் நன்முன்மாதிரிகாட்டப் பிரயாசப்படுகின்றனர்.

வண. துஷோஸ்வா, O. M. I. சுவாமியார் (Revd. Fr. Duchassissois, O. M. I.) அமலோற்பவ நாயகி சபையினது (O. M. I.) பரித்தியாகிகளாகிய குருமாரும் துறவிகளும் பரிபாலித்துவரும் 'மிஷன்'களையும், அவர்கள் புரியும் தொண்டுகளையும்பற்றி அரிய சரிதைகள் எழுதி இருக்கின்றார். அவர் யாழ்ப்பாணத்தையும் தரிசித்தவர். ஒரு புத்தகத்திலே அவர் எழுதுவது :—



செண் வின்சென்ற் டி போல் தருமசபை
அர்ச். சூசையப்பர் பந்தி (1905 இல் ஆரம்பிக்கப்பட்டது.



வண. விரத்தர் குருசோ யாழ்ப்பாணத்துச் சுருட்டுத் தொழிற்சாலைகளிலே வேலைபுரியும் தொழிலாளரினது அப்போஸ்தலராக விளங்குகின்றார். ஆயிரக்கணக்கான தொழிலாளரை இவர் தீமையிலே நின்று காப்பாற்றி இருக்கிறார். சென்ற அறுபது ஆண்டுகளாக இவர் புரிந்த அப்போஸ்தொலிக்க தொண்டினது பயனாக அந்த ஏழைத் தொழிலாளர் அநேக உத்தம கிறீஸ்தவ குடும்பங்கட்குத் தலைவரானார்கள். ஆன்ம இரட்சணிய ஆவல்நிறைந்த இந்த விரத்தருடைய பிரயாசத்தின் பயனாக, நூற்றுக்கணக்கான இந்துமதத் தொழிலாளரும், மனந்திரும்பிச் சத்தியமறையைத் தழுவிக்கொண்டார்கள்.

## அர்ச். வின்சென்ற் டி போல் பந்தி

யாழ்ப்பாணப்பட்டினத்திலே தற்போது அர்ச். வின்சென்ற் டி போல் தருமசபைப் பந்திகள் பல ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் முதன் முதல் 1905-ம் ஆண்டு நமோவென அந்தச்சபையை விரத்தர் குருசோவுடைய ஊக்கத்தினாலேயே சஞ்சூசையப்பர் கூட்டத்து அங்கத்தவர்கள் பலரினால் தொடக்கப்பட்டது. யாழ்ப்பாண மக்களுள் சுயமரியாதையைப் பேணுங்குணம் வைரமாக ஊன்றியுள்ளது. உடுக்க ஆடையின்றி, உண்ண உணவின்றிப் பத்துநாட் பட்டினிகிடப்பினும், தெருநீளந்திரிந்து இரக்கவும் மாட்டார்கள். வீட்டுக்குவீடு சென்று பிச்சைகேட்கவும் மாட்டார்கள். தங்கள் கொட்டில்களிலே, வீடுகளிலே இருந்து, தங்களினது நிர்ப்பாக்கிய வறுமையை, யாருக்குஞ் சொல்லாது தவிக்கும் ஏழைகள், கைம்பெண்கள், அநாதைகள்மேல் தயாளமே உருவான எங்கள் விரத்தருடைய இதயம் பதிந்தது. அது கசிந்து உருகியது. அப்பேர்ப்பட்டவர்கட்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடனேயே விரத்தர் அர்ச். வின்சென்ற் டி போல் சபை ஒன்றை அடியிடவேணடுமென்று முயற்சிசெய்தார். வின்சென்ற் டி போல் சபையோ உலகம் முழுவதுமே பிரஸ்தாபம்பெற்றிருப்பதை யாவரும் நன்கறிவர்.

விறதர் குருசோவினால் அடியிடப்பட்ட இந்தச்சபை தற்போது ஏறக்குறைய 75 ஏழைக்குடும்பங்களுக்கு உதவிசெய்துவருகிறது. அந்தக் குடும்பங்களை த்தவிர வேறும் தனிப்பட்ட நூற்றுக்கணக்கான பேர்களுக்கு இடையிடை தருணத்துக்கு வேண்டிய தரும உதவிபுரிந்து வருகிறது. சபை அங்கத்தவர்களின் தொகை 35. ஒவ்வொருகிழமையும் ஒவ்வொருவருக்கும் குறிக்கப்பட்ட ஏழைகளைச் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய ஆத்ம சரீர உதவிகளைப் புரிவார்கள். உதவி அளிப்பதில் சாதிபேதம், மதபேதமே பார்ப்பது கிடையாது. ஆஸ்பத்திரியிலே உள்ள நோயாளரைச் சந்திப்பார்கள். சிறைச்சாலை சென்று, அங்குள்ள சிறைப்பட்டோர்க்கு ஆறுதல் கூறுவார்கள். வருஷம் ஒருமுறை நத்தால் புதுவருடத்தை அடுத்து மறியற்காரருக்கு ஒரு சிறு

விருந்தும் கொடுப்பார்கள். மறியற்காரர் இந்தத் தருமச் செய்கையை மிகவும் உவந்து ஏற்றுக்கொள்ளுவார்கள்.


இன்னும் இருக்க இல்லிடமில்லாது பல ஏழைகள் வருந்துவதைக் கண்ட விரத்தர், மிகவும் அவர்கட்காக விசனப்பட்டார். அவரோ ஏழைகளின் அன்பரல்லவா! வருந்தியவர்; இந்த வின்சென்ற் டி போல் சபை அங்கத்தவர்களை ஊக்கப்படுத்தி, ஒரு பெரியவளவைக் குத்தகைக்கு எடுத்து, அதிலே சிறு வீடுகளைக் கட்டிப் பல வருடங்களாக அந்த ஏழைகளை அதிலே குடியிருக்க வசதிபண்ணினார்.

சரீரசம்பந்தமான தருமக்கிரிகைகளைப் புரிவதுடன் மாத்திரம் இச் சபை திருப்தி அடைந்திருக்கவில்லை. ஆத்ம சம்பந்தமான அநேக தருமச் செயல்களைப்புரிவதில் அங்கத்தவர்கள் வெகு ஊக்கமாயிருந்தார்கள். குடும்பங்களுள் ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்த்துச் சமாதானத்தை விளைவிப்பார்கள். துர்நடத்தையுள்ள கத்தோலிக்கருக்கு ஆதாவாகத் தருணங்கண்டு புத்திபுகட்டி அவர்களை மறுபடியும் சன்மார்க்க வழியிலே கொண்டுவருவார்கள். வருஷாவருஷம் இந்தப் பந்தியினால் சேர்க்கப்படும் தொகை ஏறக்குறைய ரூபா 4000/— இந்தப்பணத்தை முழுதும் தருமக் கிரிகைகளிலேயே செலவு செய்வார்கள்.

விரத்தர் குருசேகரினது இடையறா முயற்சியினால் இந்தப்பந்தி நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் வளர்ந்து அநேகாநேக நன்மைகளைப்புரிந்து வந்ததுமாத்திரமல்ல, ஆனால் இதைத்தொடர்ந்து பட்டினத்திலும் இன்னும் வேறுசில இடங்களிலும் இப்பேர்ப்பட்ட தருமசபைகளும், பத்திக்கூட்டங்களும் அடியிடப்படுவதற்கு இந்தப் பந்தியே தூண்டுதலாக நின்று ஏவி உதவியது. உதாரணமாகக் கைம்பெண்களுக்கும் அநாதைகட்கும் விசேட உதவிபுரியும்படிக்கு விரத்தர் தருமசீமாட்டிகள் சபையென்று பெண்களுக்கு ஒரு சபையை ஏற்படுத்திவிட்டார். தற்போது பட்டினத்திலே அச்சபைக்குச் சேர்ந்த இருபந்திகள் உண்டு. ஒன்று பெரியமாதாவின் ஆசனக்கோவிலுக்கும், மற்றையது அடைக்கலமாதாவின் கோவிலுக்கும் சேர்ந்தது. பிந்திய பந்தி தலைசிறந்ததொண்டு ஆற்றிவருகின்றது.

## அர்ச். அந்தோனியார் கூட்டம்

புராதன சனசமூகக் கட்டுப்பாடுகளின் கொடுமையினால் பட்டினத்திலே "தாழ்த்தப்பட்டவர்கள்" என்று அழைக்கப்படுவோர் படும் கஷ்டங்களை நிவிர்த்திசெய்ய விரத்தர் முன்வந்தார். இந்தச் சுத்த ஆத்மா தானும் அநேக யுகங்களாக வேரூன்றியிருந்த அந்தக் கட்டுப்பாடுகளை முற்றும் நீக்க இயலாததை உணர்ந்து தாழ்த்தப்பட்டோருக்கெனப் புறம்பாக ஒரு பத்திச்சபையை ஏற்படுத்திவிட்டார். அதுதான் தற்போது பட்டினத்திலே உள்ள பெரிய பத்திச்சபைகளுள் ஒன்றாயுள்ள அர்ச். அந்தோனியார் கூட்டம்.



அர்ச். அந்தோனியார் கூட்டம் (1910 இல் ஆரம்பிக்கப்பட்டது)

Sri Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

அர்ச். அந்தோனியார் கூட்டம் அடியிடப்பட்ட அந்த அந்நிய நாட்களில், கொஞ்சேஞ்சிமாதா ஆசனக்கோவிலுக்குக் கட்டளைக் குருவாயிருந்தவர் வண. E. ஷென், O. M. I. சுவாமியார் அவர்கள். அவருக்கு உதவிக் கட்டளைக் குருவாயிருந்தவர் "தீண்டாச்சாதியினரென்றும்" "தாழ்த்தப்பட்டவர்களென்றும்" முறையீனமாய் அழைக்கப்படும் சனசமூகத்தினருக்கு விசேட அப்போஸ்தலராயிருந்தவரும், யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே அப்போஸ்தொலிக்க குருத்துவ தொண்டிற்கு அணிகலமாய் இலங்கியவரும், யாழ்ப்பாணச் சின்னச் சவேரியார், சாங்கோபாங்கரென்று போற்றப்படுபவருமான வண. S. ஞானப்பிரகாசர், O. M. I. சுவாமிகளே. இந்த இரு பூசித குருக்களும் பரமபதம் அடைந்துவிட்டார்கள். அவர்களோ அந்தோனியார் கூட்டம் அடியிடப்பட்டபொழுது அதைத் தங்கள் இருகரங்களினாலும் அணைத்து ஏற்றுப் பெரிய கோவிலில் அவர்கள் தொண்டாற்றுமட்டும் பெரிதுமதை உவந்து பரிபாலித்துவந்தார்கள்.

1910-ம் ஆண்டு சம்பத்திரிசியார் கல்லூரியினது பிரஸ்தாபம் பெற்ற தலைவராயிருந்தவரும், வாலர்களைக் கிறீஸ்துவதொண்டில் பயிற்றுவதில் இன்னொரு டொன்பொஸ்கோவென விளங்கியவரும், தயாள சிந்தையும் ஒப்புயர்வற்ற கல்வித்தலைவரும், தர்மப்பொற்குன்றுமென இலங்குபவருமான வண. சாள்ஸ் S. மத்தீயூஸ், O. M. I. சுவாமிகள், பத்திரிசியார் கல்லூரிக்குச் சேர்ந்த ஒரு சிறிய வளவை மேற்றிராணியாரினது அநுமதியுடன் அந்தோனியார் கூட்டத்துக்கு உதவினார். அதிலே கூட்டத்தவர்க்கென ஒரு சிறந்த சின்னச்சாலை கட்டப்பட்டிருக்கிறது. தற்போது இந்தக் கூட்டத்தினது அங்கத்தினர் தொகை 300. தங்கள் சாகியத்தினரது வைதீக, லௌகீக முன்னேற்றத்திற்காக இவர்கள் அரும்பெரும் பிரயாசையுடன் உழைத்து அதை என்றுமே, மேல் நிரைக்குச் செல்லும்பாதையில் நடத்திவருகின்றார்கள். அந்த நாட்களிலே விரத்தர் குருசோ அந்தச் சாகியத்தினருக்கென இந்தக் கூட்டத்தை ஏற்படுத்தியது தெய்வ பராமரிப்பினது ஒரு காருண்ய செயலென்றே சொல்லவேண்டும். ஏனெனில் தற்போது யாழ்ப்பாணத்திலே "தாழ்த்தப்பட்டோர்" என்று சொல்லப்படும் சாகியத்தினருள் அநேகர் பொதுவுடமைக் கட்சியை ஆதரிப்பவர்களாகத் தெரிகிறது. ஆனால் அந்தக் கொள்ளைநோய் அந்தச் சாகியத்தினரது கத்தோலிக்க வாலர்களைத் தீண்டவில்லை. அதற்கு ஏற்கனவே தடைகட்டிக்காத்துவைத்தது விரத்தர் குருசோவினால் அடியிடப்பட்ட இந்தக்கூட்டமே.

தம்மைச் சூழவிருந்த ஆத்துமாக்கள் எல்லாம் இரட்சணியத்தை அடையவேண்டுமென்று எங்கள் துறவி தணியாத ஆவல்கொண்டவராய் இருந்தபடியால் அதற்காக வேண்டியவைகளைப்பற்றியே எந்தநேரமும் சிந்தனை செய்வார். ஆடவருக்கோ, பெண்களுக்கோ, பெரியோருக்கோ, சிறியோருக்கோ, வாலருக்கோ, பாலருக்கோ, கற்றவர்க்கோ, கல்லாத

2

005576

வர்க்கோ, ஏழைகட்கோ, செல்வர்கட்கோ யாவருக்கும் தம்மாலான எதையோபுரிந்து அவர்களினது இதயங்களில் பரமதிரீத்துவத்தின் முத்திரையைப் பதியப்பண்ணிவிட வேண்டுமென்ற ஆவல் அவருடைய இதயத்திலே மூண்டெரிந்து கொண்டிருந்தது. அதன்பயனாக அவர் புரிந்த பல தொண்டுகளுள் இன்னுஞ் சிலவற்றைப்பற்றி இங்கு குறித்தல் வேண்டும்.

## 1. இராப்பள்ளிக்கூடங்கள்

பல சிறுபிள்ளைகள் தங்கள் வறுமையினால் சுருட்டுக்கட்டும் வேலையைச் சுருட்டுமடுவங்களிலே புரிவார்கள். அவர்கள் கல்வியறிவில்லாமல் இருந்தார்கள். அவர்களுக்கும் இன்னும் கல்வி கற்காத மற்றவர்கட்கும், விரத்தர் இரண்டு இராப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார்.

## 2. மதுவிலக்குச்சபை

குடிவெறியினால் அநேக குடும்பங்களுக்கும் ஊருக்குமே வரும் தீமைகளை அகற்றுவதற்காக மதுபானத்தை முற்றுமே விலக்கும்படி அவர் யாவரையுமேவி, மதுபான விலக்குச்சபையை ஸ்தாபித்துவிட்டார். அதிலே 200 அங்கத்தவர்கட்குமேற் சேர்ந்திருந்தார்கள். பஞ்சபாதகங்களுள் ஒன்றாகத் தமிழிலே கூறப்படும் குடிவெறியென்னும் பாதகனை பிசாசை ஓட்டிவிட அவர் எடுத்துக்கொண்ட பிரயாசையால், அவர் நீக்கிவைத்த வறுமை, துக்கம், நோய் அவர்காத்துவைத்த இளங் குடும்பங்கள் அநந்தம்.

## 3. வாசிகசாலை

நல்லவாசினையை ஊக்கப்படுத்தும்பொருட்டு ஒரு வாசிகசாலையை ஸ்தாபித்துவைத்தார். அதிலே வேத அறிவையும் சன்மார்க்க நெறியையும் வளர்க்க ஏதுவான அநேகம் புத்தகங்களை வாங்கிவைத்து, விருப்பமானவர்கள் இலவசத்திலே அவைகளைப் பெற்று வாசித்து ஒரு மாசக் கெடுவினுள் திருப்பிக் கொடுக்கும்படிக்கு ஒழுங்குகள் ஏற்படுத்தினார். அதனால் விளைந்த நன்மையோ சொல்லுந்தரமல்ல. நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் அந்தப் புத்தகங்களைப் பெற்று வாசித்த தன்பயனாக அவர்களுடைய வேத அறிவும், உலக அறிவும் ஏற்றமடைந்தன. கத்தோலிக்க நூல்களை வாசித்து உருசிகண்டவர்கள் எப்போதுமே அவைகளைத் தேடிவாசிப்பார்கள். அவ்வித வாசினையை ஊக்கப்படுத்துதல் உண்மையான அப்போஸ்தொலிக்க தொண்டேயாம்.

## 4. திரு இருதயக் காரியசாலை

தேவநற்கருணையிலும், யேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இருதயத்திலும் அவருடைய இருதயத்திலே அனலானபக்தி மூண்டெரிந்துகொண்



சற்பிரசாதநாதர் கூட்டம் (1912 இல் ஆரம்பிக்கப்பட்டது)



டிருந்ததை யாவரும் அறிவர். அந்தப்பக்திமுயற்சிகளை மற்றும் யாவருடைய இருதயங்களிலும் மூட்டிவிட வேண்டுமெனத் தீர்மானித்தார். அதற்காகத் திரு இருதய காரியசாலையொன்றை ஸ்தாபித்தார். அந்தச் சாலையிலே இருந்து நற்கருணையின்பேரிலும், திரு இருதயத்தினுடைய வணக்கத்தைப்பற்றியும் வெளிவந்த புத்தகங்களும், துண்டுப் பத்திரங்களும் அநேகம். அதனால் பட்டின மீசாங்களில் மாத்திரமல்ல மற்றும் மேற்றிராசனத்திலே உள்ள பலபங்குகளிலும் அந்தஇரு பக்தி முயற்சிகளும் பலித்துச் செழித்து வளர்ந்தன. அவைகளோடு இணைந்த நித்திய ஆராதனைக் கூட்டத்துக்கும் அவர் புத்துயிர்கொடுத்து அதைப் பல ஆலயங்களிலும் அருட்டிவிட்டார்.

## 5. நற்கருணைப் பக்திக்கூட்டம்


தமிழ்ப்பாடசாலைகளிலே கல்விகற்கும் சிறுவர்களுடைய இதயங்களில் சற்பிரசாதநாதரின்மேல் அனலான அன்பை ஊட்டிவிட வேண்டுமென்று விரத்தர் ஆவல்கொண்டார். அதற்காக அவர்களுக்கென நற்கருணைப்பக்திக் கூட்டமொன்றை ஸ்தாபித்தார். ஒவ்வொரு வியாழன், சனி வாரங்களிலும் சிறுவர்களும் சிறுமிகளும் நூற்றுக் கணக்காகக் காலமே விடியவந்து கூடுவார்கள். விரத்தர்தாமே அவர்களை நிரையேவிட்டு ஆலயத்துக்குப் பூசைகாணும்படி நடத்திச்செல்வார். பூசைநேரத்திலே நற்கருணை உட்கொள்ளும் முன்னும், உட்கொண்ட பின்னும் செபிக்கவேண்டிய பாலருக்குரிய செபங்களைத் தாமாகவே தமிழிலே தெளிவாக வாசிக்கப் பிள்ளைகள் அவரைத்தொடர்ந்து உரத்த சத்தமாகச் செபிப்பார்கள். அதைக் கவனிப்பவர்களுக்குத்தானும் அது மிகவும் மனவருட்சியைக் கொடுத்தது. பூசைமுடிந்தபின் சிறுவர்கள் யாவருக்கும ஞானஉபதேசத்திலே ஏதோ ஒரு சிறுபகுதியை எடுத்து விளக்கியபின் அமைதியாக வீடுசெல்லும்படி அவர்களை ஏவிவிடுவார். வியாழக்கிழமைகளிலே பாடசாலைப்பிள்ளைகளைப் பள்ளிக்கூடநேரத்திலே ஒரு அரைமணித்தியாலத்துக்குச் சற்பிரசாதம் சந்திக்கத் தாமே அழைத்து வருவார். ஆராதனையில் அவர் சமூகமாயிருந்து செபங்களை ஓதியபின் நற்கருணை ஆசீர்வாதத்துடன் அதுமுடிவாகும். இவ்விதமான அரிய முயற்சியினால் விளைந்த நன்மைகளோ பெரிது. ஆறுவயதுக்கும் பதின்மூன்றுவயதுக்கும் இடையில் உட்பட்ட நூற்றுக்கணக்கான சிறுவர்கள் இந்தக் கூட்டத்திலே அங்கத்தவர்களாய் இருந்ததன் பலனைத் தங்கள் பாலிய பராயத்திலேயே திவ்விய பூசையிலேயும், தேவநற்கருணையிலேயும் உருக்கமான பக்திவைக்கக் கற்றுக்கொண்டார்கள். அடிக்கடி தக்க ஆயத்தத்துடன் நற்கருணை உட்கொள்ளப் பழகிக்கொண்டார்கள். இந்த உத்தமமான பழக்கத்தை அவர்கள்வளர்ந்து பெரியவர்களானபின்னும் கைவிடாது கடைப்பிடித்து ஒழுகினார்கள்.

## 6. திரு இருதயநாதரின் சிறிய சிலுவைப்படை வீரர்கள்

1942-ம் ஆண்டு இந்த நாமத்துடன் ஒரு புதிய கூட்டத்தை ஸ்தாபித்தார். இலங்கை, இந்தியா, பேர்மாவிலுள்ள மேற்றிராணிமார்கள் இந்தக் கூட்டத்தைப் பெரிதுமுவந்து ஆசி ஈந்து, தங்கள் மேற்றிராசனங்களிலே பலபல கிளைக்கூட்டங்களை ஸ்தாபித்து இருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தைப் பாராட்டிச் சென்னபட்டணத்து அதிமேற்றிராணியார் விறதர் குருசோவுக்கு எழுதியது :— "திரு இருதயநாதரினது சிறிய சிலுவைப்படை வீரர் கூட்டத்தை நாமும் பெரிதுமனமுவந்து ஆசீர்வதிக்கின்றோம். நம்மையும் அதிலே ஒரு அங்கத்தவராகச் சேர்த்துக் கொள்ளவும்." இவ்விதமாகவே அநேக மேற்றிராணிமாரும் குருமாரும் இதைப் புகழ்ந்துரைகூறி இருக்கின்றார்கள். எங்கள் வந்தனைக்குரிய மேற்றிராணியாராகிய கியோமார் ஆண்டவர் அவர்கள் நிரூபித்ததன்படி இந்தக்கூட்டத்து முக்கிய முகாந்தரம் யாதெனின்: "மனுக்குலம் முழுவதையும் மனந்திருப்பி யேசு இரட்சகருடைய மந்தையிற் சேர்ப்பதேயாம்." அதனுடைய மேல்வரிச்சட்டமாகிய முக்கியசெபம்: "யேசுவின் அதிபரிசுத்தமான திவ்விய இருதயமே: உமது இராச்சியம் வருக." ஏறக்குறைய இந்த இலங்கையிலே உள்ள கத்தோலிக்க பாடசாலைகளைச்சேர்ந்த சிறுவர்கள் யாவரும், இந்தக் கூட்டத்திலே அங்கத்தவர்களாய் இருக்கிறார்கள். அநேக முதியோரும் சேர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொருநாளும் மேலே குறித்திருக்கும் வேண்டுதலை ஓதி அதன்பின் மாசில்லாத மாதாவுடைய இருதயத்தைவேண்டி மூன்று பிரியதத்தம் செபித்து உலகத்திலே உள்ள சகல சாதிசனங்களும் மனந்திரும்ப வேண்டுமெனப் பிரார்த்திப்பார்கள். இந்தக்கூட்டத்தினது முயற்சிகளை ஊக்கப்படுத்துவதற்காகச் சில எழுத்தாளர்களுடைய உதவியுடன் ஒரு மிகச் சிறிய பத்திரத்தையும் மாதாந்தம் அச்சேற்றி வெளியிட்டுவந்தார். அந்தச் சின்னப்பத்திரிகை அவர் மரணித்தபின் வெளிவராதது விசனிக்கத்தக்கதே.

## 7. திருமணித்தியாலப்பக்தி ஆராதனை

உலகப்பிரசித்தி பெற்றவரும் திரு இருதய அப்போஸ்தலரென்று அழைக்கப்படுபவருமான வண. மத்தேயோ சுவாமி அவர்கள் ( Rev. Mateo Grawley-Boevey SS. CC. ) திரு இருதயத்தின் மேல் பக்தியையும், திரு இருதயநாதரை ஒவ்வொரு இல்லத்திலேயும் இராசாவாக ஏற்று, அவருடைய படத்தையோ, சுரூபத்தையோ ஆசாரத்துடன் வீடுகளிலேயும், பாடசாலைகளிலேயும், தொழிற்சாலைகளிலேயும்வைத்து வணங்கும் அனுசாரத்தையும் உலகம் எங்கும் சென்று போதித்துவந்தார். பரிசுத்த பாப்பரசராகிய பதினொராம் பத்திநாதர், அந்த அரியதொண்டிலே அந்தப்பரிசுத்த குருவானவர் தமது சீஷியத்



திருமுகக்கூட்டம் (1935 இல் ஆரம்பிக்கப்பட்டது)



யைச் செலவழிக்க வேண்டுமென உத்தரவும் இட்டுத் தமது விசேட ஆசியையும் ஈந்து அனுப்பியிருந்தார். அவரே திருமணித்தியாலம் அல்லது சற்பிரசாதத்தின்முன் இராஆராதனை என்ற பத்திமுயற்சியை வெகு ஊக்கத்துடன் பரப்பினார். அவருடைய சீரிய அப்போஸ்தொலிக்க தொண்டிற்கு யாழ்ப்பாணத்திலே உதவிபுரிய விறதர் குருசோ ஆவலுடன் முன்வந்தார்.

திரு இருதய ஆண்டவருடைய படங்களை வெகு தொகையாக அவர் அழைப்பித்துப் பட்டினத்திலே உள்ள பல கத்தோலிக்கரினது வீட்டு எசமான்களுக்கு இலவசமாக உதவினார். ஒவ்வொரு வீட்டிலேயும் திருஇருதயநாதருடைய இராசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதன் அடையாளமாக அப்படங்கள் ஆசீர்வதிக்கப்பட்டுப் பூச்சியத்துடன் வைத்து வணங்கப்பட்டுவருகின்றன. யாழ்ப்பாணப்பட்டினத்திலே மாத்திரமல்ல, மேற்றிராசனத்தினது பலபகுதிகளிலுமே கிறீஸ்தவ இல்லங்களிலே திருஇருதயநாதரைத் தங்கள் தேவ இராசாவாக முடிசூட்டிவைத்து வணக்கஞ்செய்யும் பத்தியை விரத்தர் பரப்பிவிட்டார்.

சலியாத ஊக்கத்துடன் விரத்தர் செய்த முயற்சியினால் திருமணித்தியாலப்பத்திமுயற்சி, ஆலயங்களில் மாத்திரமன்று, வீடுகளிலேயும் அனுசரிக்கப்படுகின்றது. இலங்கை, இந்தியா, மலாயா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்காவுக்குத்தானும் இந்தப்பத்தி முயற்சிகளைப் பரப்பும்படிக்கு அவர் எழுதி அனுப்பிய கடிதங்களுக்கோ கணக்கில்லை. அனுப்பிய சிறு புத்தகங்களும், துண்டுப் பத்திரங்களும் அநேகாநேகம். இந்தப் பரிசுத்த தேவதொண்டர் மறைமுகமாக இருந்துகொண்டு தமது கடிதங்களினாலும், அச்சேற்றப்பட்ட பத்திரங்களாலும் யேசு இரட்சகருடைய இராச்சியத்தைப் பரப்பப் புரிந்த தொண்டு வியக்கத்தக்கதேயாம். அதனால் விளைந்த நன்மைகட்கோ கணக்கில்லை.

## 8. திருமுகப்பத்திக் கூட்டம்

இன்னும் அவர் ஸ்தாபித்த இன்னொரு பத்திக்கூட்டம் உண்டு. அதுவே திருமுகப்பத்திக்கூட்டம். திருமுகத்திலே விரத்தர் பெரிய பத்தியுடையவராய் இருந்தார். அந்த உருக்கம் நிறைந்தபத்தியை யாழ்ப்பாணத்திலே பரப்பும்படிக்குப் பாடசாலைகளிலே கல்விகற்று முடிந்ததன்பின் தங்கள்வீடுகளிலே இருந்த இளம்பெண்களை ஒருகூட்டமாகக் கூட்டித் திருமுகக் கூட்டத்தை ஏற்படுத்தினார். ஏற்படுத்தியபின் பிரான்ஸ் தேசத்திலே **தூர்ஸ்** நகரிலே ஸ்தாபிக்கப்பட்டிருந்த பெரிய பிரதம தாய்க்கூட்டத்துடனே அதை முறையாய்ச் சுவிகாரம்செய்து இணைத்துவிட்டார். ஒவ்வொரு சனிவாரத்திலும் நூற்றுக்கணக்கான கூட்டத்து இளம்பெண்கள் பெரிய கோவிலிலே 6·30 மணிப்பூசைகாண வந்துகூடுவார்கள். விரத்தர் தாமே செபங்களைப் பூசைநேரத்திலே தமிழிலே வாசிப்பார். அவர்களுள் அநேக பெண்கள் சற்பிரசாதம் பெறு

வார்கள். பூசைமுடிந்ததன்பின் குருவானவர் கூட்டத்தவர்கட்குச் சுருக்கமாக ஒரு போதனை செய்வார். அதன்பின் திருமுகப்பலிபீடத்தின்முன் யாவரும்கூடி நிந்தைப்பரிகாரப் பிரார்த்தனையைப் பத்தியுடன் ஓதி ஆராதனையை முடிப்பார்கள்.

பரிசுத்த சீவியத்தினது பாதையிலே ஒழுகவும், புண்ணியத்திலே வளரவும், தங்கள் இரட்சணியத்தைத் தேடிக்கொள்ளவும் இந்த அரிய கூட்டம் எத்தனைபோ இளம் பெண்களுக்கு வழிகாட்டும் ஒரு மங்காத் தேவ தீபமாயிருக்கின்றது. இந்தக் கூட்டத்திலே அங்கத்தவர்களாய் இருந்தபடியாலன்றோ எத்தனையோ இளம்பெண்கள் கேட்டின் வழியில் செல்லாது காத்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்களுள் சில உதவியற்ற குமர்ப்பிள்ளைகள் நல்ல விவாகம் செய்துகொள்ளும்படி விரத்தர் செய்த உதவிகளை நாம் நன்கு அறிவோம்.


யாழ்ப்பாணப்பட்டினத்திலே உள்ள பத்திக்கூட்டங்கள் ஏறக்குறைய எல்லாம் விரத்தர் குருசோவினுடைய முயற்சியினாலேயே தொடங்கின. கரையூர் வாலருக்கென ஸ்தாபிக்கப்பட்ட கார்மேல் மாதாக்கூட்டந்தானும் நமோவென அவரினாலேயே அடியிடப்பட்டது. அதன்பின் அதிகாலஞ்சென்றுபோன வண. விரத்தர் மனுவேல், O.M.I. அவர்களினது கண்காணிப்பிலே ஒப்படைக்கப்பட்டது. விரத்தர் மனுவேல் மாணிக்குமட்டும் இக்கூட்டத்தை வெகுவிமரிசையுடன் நடத்தி வந்தார். அவருடைய முயற்சியினாலே கார்மேல் கூட்டத்தவர்கள் ஒருங்குகூடுவதற்காக ஒரு விலாசமான சாலையும், அத்தோடு ஒரு சின்னக்கோவிலும் கட்டி இருக்கின்றனர்.

## 9. அர்ச். பிரான்சீஸ் அசீசியின் மூன்றாம்சபை

இல்லறத்தவர்கட்கென ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிரான்சீஸ்கன் சபைச் சந்நியாசிகளுடைய மூன்றாம் பிரிவான கூட்டத்தைப் பட்டினத்திலே துவக்கிவிட்டவரும் குருசோ விறதரே. தற்போது இக்கூட்டத்திலே ஆணும், பெண்ணுமாக 25 அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். தங்கள் உத்தம கத்தோலிக்க சீவியத்தினாலும், செப, தப, தான தருமங்களினாலும் இவர்கள் தங்கள் கிறீஸ்த சகோதரர்களுக்குப் பெரிதும் முன்மாதிரிகாட்டிவருகிறார்கள்.

## 10. இன்னும் வேறுபத்திமுயற்சிகள்

பரிசுத்த செபமாலைப்பத்தி, கார்மேல்மாதா உத்தரியம், யேசுவின் திருஇருதய உத்தரியம், அற்புதவாத்தியினது வரவணிக்கம் முதலிய வைகளைப் பத்தியுடன் அணிந்து அவைகட்கேற்கச் சீவித்தல் முதலிய பத்திமுயற்சிகள் யாவையும் அவர் என்றும் ஊக்கப்படுத்திவந்தார். விசுவாசப்பரப்புதற்சபை, திவ்விய குழந்தை யேசுவின்மேற் பத்தி, திருக்குடும்பவணக்கம், முதல்வெள்ளி, முதற்சனி வணக்கங்களினது அனு



அர்ச். சூசையப்பர்கூட்டச் சிற்றாலயம்.

சாரம் இவைகளைக் கைக்கொள்ளும்படி நூற்றுக்கணக்கானவர்களைப் படிப்பித்துவைத்தார். அந்தச் சுத்தருடைய முயற்சிகள்யாவும் ஆண்டவரின் நிரம்பிய அன்பான ஆசியைப்பெற்று இருந்தனவென்று எழுதவும் வேண்டுமோ? அவருடைய அப்போஸ்தோலிக்க தொண்டின்பயனாக ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் வாலவயதிலே பயபத்தி நிறைந்த கிறீஸ்தவர்களாகச் சீவித்தும் பின் சீரியகத்தோலிக்க குடும்பங்கட்குத் தலைவரும் தலைவிகளுமானார்கள்.

## 11. இல்லறத்தோருக்கு ஞான ஒடுக்கங்கள்

இல்லறத்தவர்களும், குருமார் சந்நியாசிமாரைப்போலத் தக்கவிதமாக ஞான ஒடுக்கம்பண்ண வேண்டுமென்று அவர் ஆவல்கொண்டார். மூன்று, நாலு தினங்கட்குத் தங்கள் லௌகீக கவலைகள் யாவையும் முற்றுமே ஒதுக்கிவைத்துவிட்டு, உத்தமமானவிதமாய் அந்த நாட்களில் மவுனத்தைக் காத்துத்தங்கள் ஆத்மநிலைபரத்தைத் தீர ஆராய்ந்து செபம் செய்யக்கூடிய ஒரு இடத்தைத்தேடி, இல்லறத்தோரை அங்கு அழைத்து, அவர்கட்கு வேண்டிய வசதிகள் எல்லாம்செய்து, குருமாரைக்கொண்டு ஞான ஒடுக்கத்தை நடத்திவைத்தார். உண்மையாகவே, அடைக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, மனம்முழுவதுமே ஏகாந்தமென ஒடுங்கிச் செய்யப்பட்ட ஞான ஒடுக்கத்துக்குத் தொடக்கத்திலே வந்தவர்களின்தொகை பெரிதல்ல. ஆனால் காலகதியில் இல்லறத்தோர் அதன் பாரிய ஞான நன்மையை நன்கு உணர்ந்தார்கள். அதன் பயனாகத் தற்காலத்திலே யாழ்ப்பாணத்திலே அப்பேர்ப்பட்ட ஞான ஒடுக்கங்கள் ஒவ்வொரு வருடமும், பல இடங்களிலும் நடக்கின்றன. ஞானவானான அந்தச் சுத்தருக்கு எங்கள் அன்பார்ந்த நன்றி! நன்றி !!

பிறர்க்கு நன்மை செய்வதிலே தமது ஆயுளைச் செலவளிக்க வேண்டுமென்று அவர் பூண்டவிரதம், அவருடையமனத்திலே இருந்த தணியாத அவா, கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரம் நன்மைபுரிவதுடன் நின்றுவிடவில்லை. எத்தனையோ புறொட்டஸ்தாந்தர், இந்துக்கள், முஸ்லீம்களுடன் அவர் அன்பாய்ப் பழகி இருந்தார். விரத்தருடைய உந்நதமான சித்த பூரணத்தையும், களங்கமற்ற பரிசுத்த சீவியத்தையும, கபடற்ற நெஞ்சையும், சுத்த கருத்தையும், சனசமூக நிலைமையைச் சீர்ப்படுத்த அவர் எடுத்தாண்ட கைதேர்ந்த முறைகளையும் அவர்கள் அவதானித்தார்கள். அதனால் அவரை வெகுவாக மெச்சினார்கள். அவரில் அன்புபாராட்டினார்கள். அவ்வளவுடன் நின்றுவிடாது பல வேளைகளில் அவருடைய முயற்சிகளை ஊக்கப்படுத்துவதற்காகப் பண உதவியுஞ் செய்தார்கள்.

கத்தோலிக்கர் அல்லாதவர்கள், எங்கள் விரத்தரை எவ்வளவாக மதித்துப் பாராட்டிவந்தார்கள் என்பதை இதன்கீழ் வரையப்பட்டிருப்பதினால் விளங்கிக்கொள்ளலாம் :—

"வண. விறதர் குருசோ சனசமூகத்துக்கு அரிய தொண்டாற்றி இருக்கின்றார். இந்த நாட்டிலே உள்ளவர்களினது சமூக வாழ்க்கையிலே ஏற்படும் பல இன்னல்களை நீக்க அவர்பட்ட அரும் பெரும் பிரயாசைகளைப்பற்றி யாவரும் அறிவர். தமது பிறர் சிநேகத் தருமத் தொண்டுகளை அவர் தமது மார்க்கத்தவர்களுக்கு மாத்திரம் புரிந்தவர் அல்லர். மதபேதம் சாதிபேதம் பாராமல் எல்லாருக்குமே அவைகளைப் புரிந்து தொண்டாற்றிவந்தார். அவ்வித தொண்டுகளிலே சற்றும் சலியாது உதவிபுரிய எப்போதும் ஆயத்தமாயிருந்தார். மதுவிலக்கு முதலான இயக்கங்களை வெகு ஊக்கத்துடன் தாபரித்து உதவியருளினார். அவ்விதமான பொதுசன தொண்டிலே அவர் கணிக்கப்படவேண்டிய ஒரு பெரியாராய் இருந்தனர்." (The Ceylon Patriot: இலங்கைச் சுவதேசாபிமானி எனும் இந்துப்பத்திரிகை.)

அவர் மரித்தபின் அர்ச். அந்தோனியார் கூட்டத்து அங்கத்தவர் ஒருவர் பத்திரிகையில் வெளிப்படுத்திய ஒரு நிருபத்தின் சாரத்தை இதன்கீழ் வரைகின்றேன். எவ்வளவு உருக்கமான அன்புடன் அந்தோனியார் கூட்ட வாலர்கள் மாத்திரமன்று, மற்றும் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டத்தின் அங்கத்தினர் யாவராலும் அவர் அன்பு வணக்கத்துடன் நேசிக்கப்பட்டு வந்தாரென்பதற்கு அதுவும் ஒருசான்று :—

"எங்கள் மகாத்மா மரணத்திரையினுள் மறைந்தார். எங்களை அவர் சிநேகித்தார். தமது சீவியத்தை எங்களுக்காகப் பரித்தியாகஞ் செய்தார். எங்களுக்கு அவர் அன்புமிக்க அப்போஸ்தலராய் இருந்தார். எங்கள் செபக்கூடங்களில் எங்கள் பிரார்த்தனைகளை முன்னின்று நடத்தினார். அவர் எங்களை அடிமைத்தனத்தில்நின்று விடுதலை செய்தார். எங்கட்கு எல்லா அவசரங்களிலும் அவர் எங்கள் பிதாவாகவும் வழிகாட்டியாகவும் நின்று தவறாத உதவிபுரிந்தார். புன்னகையும், அன்பும், அனுதாபமும், சமாதானமும் நிறைந்து மலர்ந்த முகத்துடன், அவர் எங்கள் வறிய குடிசைகட்கு வந்து எங்களைச் சந்தித்துப்போவார். அவர் முகங்கண்டதே எங்கள் கவலைகள் எல்லாம் பரிதிமுன் பனித்துளிபோல் மறைந்து, இளம்வெய்யிலென உளமகிழ்ச்சி எங்கள் மனங்களை நிரப்பிவிடும். எங்கள் டொன்பொஸ்கோ எங்கள் புண்களைக் கழுவினார். எங்கள் நோயாளருக்கு மருந்துகள் கொண்டுவந்து உதவினார். பசியாய் இருக்கும்போது போசனந்தந்தார். உடுக்க ஆடையற்று நொந்தபொழுது வஸ்திரம் உதவினார். ஒருபோதுமே நாங்கள் அவரை மறக்கப்போவதில்லை. அவருடைய திருஉரு என்றுமே எங்கள் இதயங்களில் வீற்றிருக்கும். எங்கள் மகாத்மா, எங்கள் அப்போஸ்தலர் பழுதுகளை நீக்கித் தக்க திருத்தங்களை ஏற்படுத்த முன்வந்தார். மண்ணினுள் மறைந்தார். கிடுகினால் வேய்ந்த தமது சின்ன அறையினுள் எங்களை வரவேற்பார். அது ஒரு வறியவருடைய அறையென்பதை உட்புகுந்தவுடன் யாவரும் கண்டுகொள்வர். அவ்வறையினுள் வரிசைவரிசையாகப் புத்தகங்களும், துண்டுப்பத்திரங்களும் தட்டுகளின்மேல் அடுக்கப்பட்டிருக்கும் படங்களும், "மெடல்"களும், செபமாலைகளும் சிறிய பெட்டிகளிலே அங்கேகாணலாம். அவைகள் யாவும் வறியவர்கட்கே"...........



மேலே இவ்வளவு உருக்கமாக வரையப்பட்டவைகள், இதை எழுதினவருடைய மனத்தினுள் மாத்திரம் அருண்டெழுந்த உணர்சிகள் அல்ல. ஆனால் விறதர் குருசோவை அறிந்த ஆத்தனை பத்திக்கூட்டங்களிலும் உள்ள எல்லா அங்கத்தவர்களினதும், ஏழைகளினதும் இதயங்களிலே பொங்கி எழுந்த உணர்ச்சிகளின் எதிரொலியே அந்த வாக்கியங்கள் என்க.

வண. விரத்தர் குருசோ, பரிசுத்தர்களின் பாதையிலே சுமுத்திரையாய் ஒழுகிவந்த தேவதொண்டர் என்பதற்கு ஐயமில்லை. சர்வேசுரனுடைய மகிமைக்காகவும், ஆன்மாக்களினது இரட்சணியத்துக்காகவும் சாங்கோபாங்கத்தில் தாம் என்றுமே வளரவேண்டும் என்ற அவா அவரைப் பீடித்திருந்தது. அதற்காகத் தம்மாலான எல்லாவற்றையும் செய்தார். உத்தமவிரத்தராக, துறவியாக, சந்நியாசியாகத் தாம் என்றும் சீவிக்கப் பிரயாசப்பட்டார். சந்நியாசம் பூண்டோர்க்கு அவர் உண்மையிலே ஓர் மேல்வரிச்சட்டமாய் இருந்தாரென்பதை அவரை நன்கறிந்த யாவரும ஏற்றுக்கொள்ளுவர். பிறருக்கு ஆத்ம சரீர நன்மைகளைப்புரிவதற்காக அவருக்கு அல்லும் பகலும் ஓயாதிருந்த அலுவல்களோ அநேகம். "மூச்சுவிடவும் அவருக்கு நேரமுண்டோ?" எனப்பேச்சு வழக்கிலே சொல்லலாம். அப்படியிருந்தும் ஒரு வாக்குத் தத்தம்கொடுத்த சந்நியாசியார், ஒவ்வொருநாளும் ஓதவேண்டிய செபங்களையும், புரியவேண்டிய பத்திக்கிரிகைகளையும், அணுவளவும் தவறாமல் குறிக்கப்பட்டிருந்த நேரங்களில் சுமுத்திரையாய்ச் செய்து முடிப்பார். தமது சபையின் ஒழுங்குச் சட்டங்களால் விதிக்கப்பட்டவைகளில் இம்மியளவும் பிசகார். இன்னும் அவைகட்கும் மேலாக அவருடைய ஆத்துமத்தைக் கவர்ந்திழுத்த சில விசேஷ பத்திமுயற்சிகளையும் ஒவ்வொருநாளும் புரிவார். உதாரணமாகச் சிலுவைப்பாதைப் பத்திமுயற்சி. பதினைந்து ஆண்டுகளாக அவருடன் ஒருங்கு சீவித்த ஒரு சந்நியாசி சொல்லுவது யாதெனில் : "அந்தப்பத்தி மிகுந்த சீலர் ஒவ்வொருநாளும் தவறாது சிலுவைப்பாதையை ஓதிவந்தாரென்பதை நான் நன்றாயறிவேன்." அது அவரினாலே மிகவும் உவக்கப்பட்ட பத்திமுயற்சி.

வயது பின்சரிவான காலத்திலே அவர் அநேக ஆண்டுகளாக— ஏறக்குறையப் பத்துவருடங்களாக — ஒரு நோயினால் வருந்தினார். அவருடைய கண்பார்வை மெத்தமெத்த அற்றுப்போயிற்று. என்றாலும்

அவருடைய சுத்த மனத்தினதும், கனிந்த இதயத்தினதும் பார்வை இம்மியளவுதானும் குறையவே இல்லை. வீரன் பார்வை விழுமட்டும் குன்றாது. மண்ணினுள் மறையுமட்டும், மகாத்மாவின் பார்வை குன்றாது. ஊனக்கண் மங்கமங்க ஞானக்கண் மேன்மேலும் துலங்கியது. ஏனெனில் அவர்தமது கடைசி மூச்சுவிடுமட்டும், செய்துவந்த சகல முயற்சிகளையும் சலியாது தொடர்ந்து நடத்திவந்தார். விருத்தாப்பியத்தினால் நேர்ந்த பலவீனம், நோய் அவரைக் களைக்கவே பிடிக்கவில்லை. கடைசி மூச்சுவிடுமட்டும் தம்மை இரட்சித்தவருக்காகத் தம்மை முற்றுமே பரித்தியாகஞ் செய்து, அவருக்கு உத்தம தொண்டுபுரிந்தார். ஆகவே உத்தம தேவதொண்டருக்கு ஆண்டவர் அருளும் பரிசுத்தமும் பாக்கியமும் சமாதானமும் தேங்கிவடிந்த நன்மரணம் அவருக்கும் அருளப்பட்டது. ஆழ்ந்த சமாதானத்துடன் ஆண்டவரிலே இளைப்பாறினார். எங்கள் அரிய பரிசுத்த துறவி 1948-ம் ஆண்டு மாசிமாதம் 13-ம் திகதி மரணத்திரையினுள் மறைந்து பரமபதஞ் சென்றார். விரத்தரினால் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டங்களினது அங்கத்தவர்கள் ஆயிரமாயிரமாகக் கூடிவந்து அவருடைய மேனியைப் பெரிய கோவிலின் சேமக்காலையிலே வெகுபத்தியாசாரத்துடன் அடக்கம்செய்து சென்றார்கள். பரிசுத்தவான்களின் மரணம் பாக்கியம்நிறைந்ததாமே.

விரத்தர் மாணித்தபின் சிலர் பத்திரிகைகளிலும் வேறு பத்திரங்களிலும் அவரைப்பற்றிக் குறிப்புரைகளும், விஷயங்களும் எழுதி இருந்தார்கள். அவற்றினுள் சிலதை இதன்கீழ்த்தருகின்றோம்.

வட இலங்கையிலே உள்ள ஒரு கத்தோலிக்கர் மரித்துப்போன விரத்தருடன் முப்பது வருடங்கட்குமேல் நெருங்கிப்பழகி அவருடைய அன்பைப்பெறும் பாக்கியத்தை எய்தி இருந்தார். அவர் இடையிடையே எழுதுவதில் சற்று முயற்சி காண்பித்ததால், விரத்தர் அவருக்கு அடிக்கடி புத்தகங்களும் பத்திரிகைகளும் உதவி, அவரை ஊக்கப்படுத்திவந்தார். அந்த அன்பைப்பெற்றவர் எழுதிய குறிப்புகளிலே பின்வருவனவைக் கீழேதருகின்றோம் :—

" மரித்துப்போன எங்கள் ' யாழ்ப்பாண டொன்பொஸ்கோ'வுடைய பூசித மேனியை உடுத்திப் பெரிய கோவிலிலே ஒரு கட்டிலின்மேல் வளர்த்திவிட்டார்கள். சனங்கள் கூட்டங்கூட்டமாய் அந்தச் சுத்தருடைய பரிசுத்த சடலத்தைச் சந்தித்து அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொண்டிருந்தார்கள். ஏழைகள் விம்மல்பொருமலுடன் செபித்துக்கொண்டிருந்தார்கள். அடியானும் அந்தக் கட்டிலை நெருங்கி முழந்தாட்படியிட்டு அவருக்காக வேண்டுதல்செய்யத் தொடங்கினேன். அவருக்காக வேண்டுதல் செய்யத்தொடங்கிய, யான் என்னை



அறியாமலே அதைநிறுத்தி அவரையேநோக்கி வேண்டுதல் செய்துகொண்டிருந்தேன் " ……… " சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல்."

" சத்தியவேத பாதுகாவலன் " தமிழ்ப் பத்திரிகையிலே அதனுடைய ஆசிரியர் " அந்தோ ! மறைந்தார் " என்ற மகுடவசனத்துடனே வசனநடையில் ஓர் சோபசந்தாபந்தேங்கிய சரமகவியென, வரைந்துவிட்ட பத்திராசிரிய வசனங்களிலிருந்து, இதன்கீழ் ஒரு சிறுபகுதியைத் தருகின்றோம் :—

## " அந்தோ ! மறைந்தார் "

" எழுதக் கரம் எழுவதாய் இல்லையே. நினைக்கமனம் ஒரு நிலைகொள்வதாய் இல்லையே. கண்மிகுந்த சலக்கம் எய்துகின்றதே. புண்ணாய் உள்ளம் வருந்துகின்றதே. அந்தோ ! எமது அன்பான, அருமைப் பெருமையான குருசோ விறதர் மறைந்தார் ! நமது விறதர்—நம்முடைய விறதர் என்று நாம் ஒவ்வொருவருமே—நமது குடும்பத்தினர் ஒவ்வொருவருமே—அன்பு பாராட்டி, அருமை பெருமை பாராட்டிய குருசோ விறதர் மரணத்திரையில் மறைந்தார் ! ஸ்ரீலங்காவின் திருஇருதய பெரிய அப்போஸ்தலர்—தருமமே, கருணையே, அனுதாபமே, அன்பே உருவான அருமுனிவர், கத்தோலிக்க—சமூக இயக்கங்களின் பெரிய முன்னணிவீரர். சின்னச்சிலுவைப்படை வீரரின் சிறந்த தளகர்த்தர், ஆதுலர் அநாதர் ஏழைகளின் அன்னதாதா, எவ்வெவருக்குமே ஓர் நல்லபிதா, எமது ' டொன்போஸ்கோ ' எம்மைப்பிரிந்தார். தமது மகத்தான வேததொண்டு. பிறர்சிநேகதொண்டு, தருமதொண்டு, சனசமூகதொண்டு ஆதியவற்றால் யாழ்ப்பாண நாட்டில் மாத்திரமன்று. லங்காதுவீபத்தின் ஏனையபகுதிகளிலும் இந்தியா, மலாய்நாடுகளில் மாத்திரமன்று, ஐரோப்பிய, அமெரிக்க தேசங்களிலுமே சாதிபேதம், சமயபேதமில்லாது நன்கு அறியவும், நன்குமதிக்கவும் பெற்றிருந்தவரான வண. இயூஜின் குருசோ விறதர் அவர்கள் சென்ற 13-ந் திகதி வெள்ளிவாரம் பிற்பகல் 3 மணியளவில் மரணமடைந்தாரெனும் அமங்கல செய்தியாலே எவ்வெவர் உள்ளமுமே கவலையெனும் கருமேகத்தினால் கவியப்பெற்றுக் கலங்காத கண்களும் கலங்கினவெனில், பின்னர் நாம் எதைவரைவோம் ? எதைப்பகர்வோம் ? " (இதன்பின் விரத்தருடைய சீவிய சரிதையிலே விபரிக்கப்பட்டிருக்கும் தேவதொண்டைப் பற்றிச் சுருக்கமாய்க் கூறியதின்பின், ஆசிரியர் தமது பிரலாபத்தைப் பின்வருமாறு முடிக்கின்றார்.)

" தமது அந்தியநாட்களில் அவர் எப்போதும் செபமாலையும் கையுமாயிருந்து தம்மைச் சந்திக்கவந்தவர்களுக்கெல்லாம் அவர் கூறியது: ' தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ' என்பதே. பொதுவிலே வரையு

மிடத்து, அவர் எம்மத்தியில் தாம் அறியவந்த எந்த ஒரு பத்திமுயற்சியையும் பரப்பாமல் விட்டவருமல்ல ; எந்த நற்கருமத்தையும் செய்யாது விட்டவருமல்ல. இவ்விதம் அவர் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் கடவுளுக்குத் தியாகஞ்செய்து போற்றற்பாலவிதமாக ஆற்றியுள்ள தேவதொண்டு, தருமதொண்டு, சனசமூகதொண்டுகளுக்கெல்லாம் ஓர் ஆதாரபீடம் போல் விளங்கியிருந்தது, அவர் நடத்திய உத்தம சந்நியாச சீவியமே எனலாம். விறதர் அவர்களின் மரணத்தாலே நாம் அழுவாரோடு அழுது மகிழ்வாரோடுமகிழும் அரிய ஓர் பெரியாரை இழந்தோம். துன்பத்தில் ஓர் தேவதூதன்போல் வந்து எம்முன்தோன்றி எமது கண்ணீரைத் துடைத்து எம்மை ஆற்றித்தேற்றி வந்தவோர் அரிய அன்பரை இழந்தோம். ஏழைகளின் தரும தாதாவை இழந்தோம். எமது சுகதுக்கங்களையே தமது சுகதுக்கங்களாகக்கொண்டு உயிர்வாழ்ந்திருந்த ஒரு மகானுபாவரை இழந்தோம்.

எமது கண்முன்பாக நிதமும் ஓர் காவலான தூதனைப்போன்று காட்சியளித்து எமக்கு உற்சாகமூட்டிவந்த இனியவரை இழந்தோம் ! அந்தோ ! எமது அருமைப்பெருமையான குருசோ விறதர் இறந்தார் ! இனிமேல் ஓடிவந்து எமது சுகதுக்கங்களை விசாரித்துப்போக இந்த வையகத்தில் யாவர் இருக்கின்றார் ? வீடுகள்தோறும் சென்றுசென்று பாலர் பாலகிகளைத் தேடியலைந்து பட்சங்காட்ட இனி எவர் தேடிவரப்போகின்றார் ? அன்பும் அருளும் அனுதாபமும் பொலிந்த அவரது திருவதனத்தைப் போன்று இனி எவர்வதனத்தைக் காணப்போகின்றோம் ? அவரது இனிய பொன்மொழிகளைப்போன்ற கனிமொழிகளை எவரிடம் இனிக்கேட்கப்போகின்றோம் ? இத்தகைய பலசிந்தனைகளாலும் அவர்மரித்ததுமுதல் அவரது திருமேனி அடக்கம்வரையில் அழுது பிரலாபித்துக் கண்ணீர் உகுத்து நின்றமக்களின் கண்ணறுவியான காட்சியை எண்ணும்போது உள்ளம் மெழுகாய் உருகுகின்றதே. என் செய்வோம் ! தேவசித்தம் அதுவாயிற்று ". **R. I. P.**

"கத்தோலிக்க காடியன்" எனும் ஆங்கில பத்திரிகையிலே அதிவணக்கத்துக்குரிய பத்திராசிரியர் பின்வருமாறு விரத்தர் குருசோவைப்பற்றி வரைந்துளார் :—

"சென்ற கிழமை எங்கள் நல்ல விறதர் குருசோவைச் சேமக்காலையில் அடக்கம்பண்ணிவிட்டோம். அவரை அறிந்தவர்கட்கு அவருடைய மறைவினால் யாழ்ப்பாணம் முந்திய யாழ்ப்பாணமில்லாமை போல்தான் இருக்கும். அறுபது வருடங்களாக அவர் வறியவர்களினதும், தொழிலாளர்களினதும் மத்தியில் ஆற்றிவந்த உச்சிதமான அப்போஸ்தொலிக்கு தொண்டு முற்றுப்பெற்றது. பின்சென்ற நாட்களில் அவருடைய பார்வை பெரும்பாலும் மங்கிவிட்டது. விருத்தாப்பிய



நோய்களினால் பலவருடங்கட்குப் பீடிக்கப்பட்டிருந்தார். பெலன்மிகவும் குன்றிக் களைப்பு மேற்பட்டது. என்றாலும் அவரினது ஆவிபிரியுமளவும் தாம் ஏற்றுக்கொண்ட தொண்டைப் புரிந்தேவந்தார். பிரமாணிக்கமுள்ள அந்தத் தேவதொண்டரினது மாணம் ஒரு அமைதியான நித்திரைக்கு ஒப்பாக இருந்தது. தாம் தொழில் ஆற்றிவந்த தமது அறையிலிருந்து, இன்னொரு அறைக்கு அமைதியாகப் போபவர் போல, அவரும் ஆழ்ந்தசமாதானத்துடன் மாணத்திரையினுள் மறைந்து நித்திய சம்பாவனையை அடையச் சென்றார்.

அவரையும் அவருடைய பரிசுத்த சீவியத்தையும், ஊழியத்தையும் பற்றி எழுதும் யாவும் அவதானத்துடன் எழுதப்படவேண்டும். மனம் ஏவும் எதையும், நெஞ்சறிந்தயாவையும், சற்றுமனத்தை அடக்கி ஆராய்வாகவே எழுதவேண்டும். அவருடைய பரிசுத்ததனத்துக்கு முத்திரை இடும் உரித்து எங்கள் மாதாவாகிய திருச்சபைக்கே உரியது. எவரும் ஏழையோ, செல்வனோ அவரை எளிதில் கண்டுபேசக்கூடியதாய் இருந்தது. யேசுக்கிறீஸ்துநாதருடைய வறியவர்களின்மேல் அவர் உருக்கமான அன்புபாராட்டி, அனுதாபங்காட்டி, எந்நாளும் அவர்கட்காகவே சீவித்துவந்தார். செபத்தின்மேல் அன்பர். தம்மைக் கடினமாக ஒறுத்த தபோநிதி. குறித்தநேரம் தவறாது கடமைகளைப் புரிந்த சந்நியாசி. அமலோற்பவநாயகி பரித்தியாகிகளினது சபையின் பிரமாணங்களை நுணுநுணுக்கமாகப் புரிந்துவந்த துறவி. சுருங்கக்கூறில் பரிசுத்த சுவிசேஷத்தையும், அதன் உள் அடக்கத்தையும் அவருடைய நீடித்தசீவியம், அதன் உச்சிதசாதனையினால் யாவருக்கும் துலக்கிக் காட்டிய ஒரு வியாக்கியானமென்றே உறுதியுடன் கூறுதல் தகும்."

"இலங்கைக் கத்தோலிக்க தூதன்" (The Ceylon Catholic Messenger) பத்திராசிரியர், பத்திராசிரிய வசனமாய் விரத்தரைப் பற்றி எழுதிய குறிப்புகளுடன் இந்தச்சிறிய சரிதையை முடிக்கின்றோம் :—

சென்ற நூறு ஆண்டுகளாக அமலோற்பவநாயகியினுடைய பரித்தியாகிகளினது சபையைச்சேர்ந்த மேன்மைதங்கிய வந்திக்கத்தக்க மேற்றிராணிமார்களும், பரிசுத்தமும் ஊக்கமும் நிறைந்த அநேக குருப்பிரசாதிகளும் இந்த இலங்கா துவீபத்திலே அரிய தேவ தொண்டாற்றி இருக்கின்றார்கள். எங்கள் ஞாபகத்திலே அவர்கள் என்றும் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களை எங்கள் மனத்தினுள் இருத்துவதுடன், அவர்கட்குப் பக்கத்துணையாய் இருந்து, மறைந்த தாழ்மைநிறைந்த ஊழியம் புரிந்துவந்த விரத்தர் "விறதர்" மார்களை நாங்கள் ஒருபோதுமே மறக்கப்படாது. அவர்கள் மனிதர் பரிசயத்துக்குட்படாத அப்

போஸ்தலர்கள். அதாவது அவர்களுடைய அரியதொண்டு வெளி உலகினுடைய கண்ணுக்குத் தைக்காது பெரும்பாலும் மறைந்த சீவியத்தினுடைய தொண்டாகவே இருந்தது. திரு இருதய அப்போஸ்தலராய் இருந்ததினாலே விரத்தர் குருசோ யாழ்ப்பாணத்து வறியவர்களுடைய அப்போஸ்தலருமானார். "மறைந்த" தொண்டர்களான விரத்தர்மாரினது கூட்டத்துள்ளே மரித்துப்போன விரத்தர் குருசோவை மற்றெல்லாருக்கும் சிரசாக நாம்வைத்து ஏற்றி மதிக்கத்துணிகின்றோம்."

**தயாபர யேசுவே! சுவாமி! மரித்துப்போன விரத்தர் குருசோவினுடைய ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும். ஆமென்.**

A. M. D. G.

---

005576

**பத்திக்கூட்டங்களின் ஸ்தாபகரும் தருமச்சபைகளின்**
**தலைவருமான**

# வண. இயூஜின் குருசோ விறதர்

அவர்கள் மறைவுகுறித்துப் பாடிய

# கவிதைகள்

---

## I

மருந்தெனவே இருந்தவனே! வாழ்வில் நொந்த
வறியவர்க்கோர் பெருநிதியே! மாசில் நெஞ்சே!
பிரிந்தனையோ? நிலவுமுகம், புதுமைப்பேச்சு
பிள்ளைகள்யாம் என்றினியோ காண்போம் ஐயா!
அரிந்திடும்கூர் அரிவாள்போல மறைந்த செய்தி
அங்கமெலாம் அறுக்கிறதே குருசோ என்னும்
பெருங்சுகமே! பெற்றவள்போல் பிரியதாயே!
பிரிந்ததென்ன வருந்தவிட்டுப் பேசுவாயே!

## II

தண்ணளியோ ஈகைநெஞ்சோ இல்லா தோரைத்
தருமனென்றும் குமணனென்றும் புகழக்கேட்டோம்
மண்ணினிலே பாரிமுதல் நள்ளி ஈறாய்
வள்ளலெனப் பிறந்தபலர் புகழுக் கீந்தார்
புண்ணியஞ்செய் குருசோவாம் புனிதன் செய்த
பொன்கொடையோ நன்கொடையோ புகலப்போனால்
பண்ணுருகும் பாவுருகும் இரும்பு நெஞ்சும்
பாகெனவே பரிதவித்து உருகுந் தானே!

## III

சாந்தகுணம் தாழ்மைமுதல் புண்ணியங்கள்
தழைத்துவளர்ந் தொருவடிவம் கொண்டதோற்றம்
சேர்ந்தவட இலங்கையிலே நிழலைச் செய்து
கீர்த்திபெறச் சென்வின்சென்ற் சபையை ஆக்கி
தேய்ந்த செருப் போடுலவி வீடுதோறும்
சென்றுபொருள் இரந்தெடுத்துச் சேர்த்ததேனே
வாய்ந்தபெரும் வறுமையிலே வாழ்வுபட்ட
மாமானோர் புதுத்தளிர்கள் வைக்கஈந்தாய்

## IV

திங்களென முகமலர்ந்து சேமம் கேட்பாய்;
        தெருவினிலே தவமுனிபோல் திசைகள்சென்று
தங்கள்நிலை தெரியாது தவறிப்போன
        தனையர்களை ஆய்ந்தெடுத்து மந்தை சேர்த்து
சங்கமெனப் பலதருமச் சபைகள் ஆக்கிச்
        சஞ்சூசை யப்பர்சபை தழையச் செய்து
இங்கிருந்த எங்குருசோ விறதர் வேந்தே!
        எங்கொளித்துக் கொண்டனையோ இயம்புவாயே!

## V

சிறந்தவனே? யேசுபரன் "என்னைப் பின்செல்
        செகமதிலே சுகமடைவாய்" என்றுகூற
அறந்தவழும் அவனடிக்குப் பணிகள் செய்ய
        ஆவிஉடல் பொருள் முழுதும் அளித்த தூயோய்!
நிறைந்ததவம் புரிந்தவனே! சூசை தாசா!
        நிலத்திமிரும் பணத்திமிரும் கொண்ட பேர்கள்
செறிந்தவுல கந்தனிலே ஏழை வாழச்
        செய்யாத பணிபலவும் செய்தா யன்றே!

## VI

## தேற்றம்

பழுமரத்தைச் சூழ்ந்துள்ள பறவை போலப்
        பன்னெடுநாள் உன்முன்னே இருந்தமக்கள்
அழுகுரலை கேட்கலையோ? அந்தோ இந்த
        அநியாய உலகியற்கை இதுதா னப்பா
தொழுதமலன் சேவடியைப் பணிவோம் வாரீர்
        தூயவனின் திருவடியைக் குருசோ சேர்ந்தார்
எழுதமுடி யாதபயன் அடைந்தார் நாமும்
        ஏகிடுவோம் அவர்வழியில் எண்ணி மாதோ!

—அமுதி

---

St. Joseph's Catholic Press, Jaffna. 531-50.